விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 02 வியாழக்கிழமை (18.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 304

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## கே.பிக்கு எதிராக குற்றமில்லை சுதந்திரமாக செயற்பட அனுமதி

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து, தற்போது உயிருடன் இருப்பவர்களில் மூத்த தலைவரான கே.பி. எனப்படும் செல்வராசா பத்மநாதன் மீது தற்போது எந்தக் குற்றச்சாட்டுக்களும் இல்லை என்றும் அவர் மேல் இனி எந்தக்குற்றச் சாட்டுக்களையும் பதியும் எண்ணம் இலங்கை அரசுக்கு இல்லை என்றும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தின் தலைவர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

உள்நாட்டுப் போர் 2009-ம் ஆண்டு கடுமையான சண்டையிடலுடன் முடிபுக்கு வந்தபோது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட அந்த அமைப்பின் தலைவர்களில் பெரும்பான்மையானவர்கள் கொல்லப்பட்டார்கள். இந்த பின்னணியில் பத்மநாதன் தொடர்ந்தும் அரசின் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றாரா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், இன்றைய நிலையில் அவர் எந்தவித காவலிலும் இல்லைஎன்றார்.

அதேசமயம், இன்ரர்போல் எனப்படும் சர்வதேச புலனாய்வுப் பொலிஸ் அமைப்பின்தேடப்படுவோர்பட்டியலில் பத்மநாதன் பெயர் தொடர்ந்தும் இடம் பெற்றுள்ளது.

பயங்கரவாத குற்றங்கள் மற்றும் ஆயுதங்கள், வெடிபொருட்களை கொண்டு செய்த குற்றச் செயல்கள் தொடர்பில் இந்தியாவினால் அவர் தேடப்பட்டு வருவதாக இன்ரர்போல் அமைப்பு கூறுகிறது.

அரசின் அறிவிப்பை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது. உள்நாட்டுப் போர் 2009-ம் ஆண்டு முடிபுக்கு வந்தபோது வெளிநாட்டிலிருந்த பத்மநாதன் ஒரு தேடப்படும் குற்றவாளி என்று கூறியிருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பேசவல்ல அதிகாரியான ஜயலத் ஜயவர்த்தன.

பிரபாகரனின் இறப்புக்குபிறகு, விடுதலைப் (19ஆம் பக்கம் பார்க்க)

# தாமதமின்றி அரசியல் தீர்வு

## ஐ.நா.செயலர் மீண்டும் வலியுறுத்தல்



(நியூயோர்க்)

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில், யுத்தத்திற்கு அடிப்படைக் காரணமான பிரச்சினைக்கு தாமதமின்றி விரைவில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்.செல்ல முற்பட்ட 35 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணித்த 35 பேர் நேற்று புதன் கிழமை அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை அதிகாலை தென்கடற்பரப்பில் படகில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இசுறு புதா (20ஆம் பக்கம் பார்க்க)

## தவிசாளர் மீதான தாக்குதலை கண்டித்து யாழ்.நகரில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வந்தகுமார் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும் இராணுவ நில ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ்.பஸ் நிலையம் முன்பாக நேற்று முற்பகல் 11.30 மணிதொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை கண்டனஆர்ப்பாட்டம்ஒன்றுமுன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டவர்கள் எமது நிலம் எமக்கு வேண்டும் என்று கோஷம் இட்ட தோடு கைகளில் எதிர்ப்பு பதாகைகளையும் தாங்கி நின்றனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது வழமை போன்று வீதியில் இறங்கி போராட்டத்தை நடத்த அனுமதி மறுத்த பொலிஸார் ஆர்ப்பாட்டகாரர்களை கண்காணித்தவாறேபாதுகாப்புப் (20ஆம் பக்கம் பார்க்க)




## அமைச்சர்கள் எம்.பிக்கள் வெளிநாடு செல்லத் தடை

(கொழும்பு)

அடுத்துவரும் பாராளுமன்ற அமர்வுகளின்போது ஆளும் தரப்பு அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வின்போது பல சட்ட மூலங்கள் நிறைவேற்றப்படவுள்ளமையால் இவை தொடர்பான விவாதங்களில் கலந்து கொள்ளவும் அவற்றுக்கு வாக்களித்து நிறைவேற்றிக்கொள்ளவும் வசதியாகவே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை திவிநெகும சட்ட மூலத்திற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை உச்ச நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இலங்கைக்கு சொந்தமான மிதக்கும் ஆயுதக் களஞ்சியமொன்று ஐக்கிய அரபில் தடுத்து வைப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்குச் சொந்தமான, மிதக்கும் ஆயுதக்களஞ்சியமாகச் செயற்படும், கப்பல் ஒன்றை ஐக்கிய அரபு குடியரசு தடுத்து வைத்துள்ளது. கடற்கொள்ளையர்களின் ஆபத்து மிக்க கடற்பகுதியில் வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும், பாதுகாப்பு நிறுவனங்களுக்கு ஆயுதங்களை வாடகைக்கு கொடுக்கும் மிதக்கும் ஆயுதக் களஞ்சியமே தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தேசிய கொடியுடன் ஐக்கிய அரபுக் குடியரசு கடலில் தரித்து நின்ற சிந்துபாத் என்ற மிதக்கும் ஆயுதக் களஞ்சியமான கப்பலே, கடந்த முதலாம் நாள் அந்த நாட்டு கடலோரக் காவல்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துக்கு எதிரான கூட்டணிகளை ஜனநாயக மக்கள் முன்னணி வரவேற்கும்

### மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

சரத் பொன்சேகா தலைமையில் இன்று நடக்க இருக்கும் பொதுக்கூட்டத்தில் நாம் கலந்து கொள்ளப் போவதில்லை. ஆனால், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிரான அனைத்துக் கூட்டணிகளையும், ஜனநாயக சக்திகளையும் [illegible] என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

எதிர்காலத்தில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை [illegible] (20ஆம் பக்கம் பாாக்க)

## திடீர் காய்ச்சலால் குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

ஒருநாள் காய்ச்சலினால் குழந்தை ஒன்று திடீரென உயிரிழந்துள்ளது. புத்தூர் கிழக்கைச் சேர்ந்த டேதரன் கலைப்பிரியா (வயது-3) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்றுமாலை 4.20 மணியளவில் குழந்தையின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அண்மைக்காலமாக டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் குழந்தையின் உயிரிழப்புக்கும் டெங்கின் தாக்கமே காரண மாயிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### எப்போது தீரும் இந்தப் பிரச்சினை

# முன்னறிவித்தலின்றி தடைப்படும் மின்சாரத்தால் யாழ் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தினால் குடாநாட்டில் உள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக கோப்பாய் மத்தியில் உள்ள மக்கள் நாளாந்தம் இந்த மின்சாரத் தடையினால் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தடைப்படும் மின்சாரத்தினால் திட்டமிட்டு எந்தச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியவில்லை எனவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடாநாடு முழுவதும் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படும் என பலதரப்பட்டவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்ற போதிலும் அதனை நடைமுறைக்கு கொண்டுவர இன்னும் பல வருடங்கள் தேவைப்படும் என்று எண்ணத் தோன்றுகின்றது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் தடைப்படும் என பத்திரிகைகளில் அறிவிக்கப்படும் அறிவித்தல்களை ஒரு போதும் மின்சார சபை கடைப்பிடிப்பதில்லை எனவும் மின்சார சபையின் மின் தடை பற்றிய அறிவித்தல்களில் குறிப்பிடப்படும் நேர அட்டவணைக்கு அதிகமாக மின்சாரம் தடைப்படுகின்றது எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தினால் பாடசாலை மாணவர்கள் முதற்கொண்டு அலுவலக அதிகாரிகள் வரை அனைவரும் பெரும் பாதிப்படைந்து வருகின்றனர். (அ-6)

## நுளம்பு வலை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வாழும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட, தெரிவான மக்களுக்கான நுளம்பு வலை விநியோகிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதியினால் ஒழுங்கு செய்யப்பட்டு யாழ்.முதல்வர் மற்றும் சுகாதாரக்குழுத் தலைவர் ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-9)

# நில அபகரிப்புக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களை அவர்களின் சொந்த இடங்களில் வாழவிடாது அடக்கு முறைகளை பிரயோகித்து இராணுவத்தின் ஊடாக நிலங்களை ஆக்கிரமித்து அங்கு படைமுகாம்களையும் பௌத்த விகாரைகளையும் அமைத்து வருகின்ற இந்த அரசாங்கத்திற்கு எதிராக நாம் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் மீதான தாக்குதல் மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ். பஸ் நிலையம் முன்பாக நேற்று கண் டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எங்கள் தமிழினம் காலம் காலமாக வாழ்ந்து வந்த இடத்தில் இராணுவ படைமுகாம்களையும் பௌத்த விகாரைகளையும் அமைத்து இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக மாற்றும் நடவடிக்கையில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

எமது பிரதேசத்தில் உள்ள எத்தனையோ பாடசாலைகள் கூட இன்னும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படவில்லை.

அதுமட்டுமல்லாது யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை. சுமார் 20 ஆயிரம் பேர்வரைக் காணாமல் போயுள்ளனர்.

மேலும் ஜனநாயக ரீதியில் செயற்படும் மக்கள் பிரதிநிதிகளை அச்சுறுத்தி அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு வருகின்றது இந்த அரசாங்கம்.

தமிழர்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வை வழங்க இந்த அரசாங்கம் தயாராக இல்லை.

இவ்வாறான அடக்கு முறைகள் நிறுத்தப்படவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் சுயாதீனமாக செயற்பட இடமளிக்கவேண்டும். நிரந்தரத் தீர்வு வழங்கப்படவேண்டும். இல்லையேல் எமது போராட்டங்களும் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## வங்கிக் கொள்ளையை முறியடித்த பாட்டி

ஆஸ்திரியாவில் கிராம வங்கி ஒன்றைக் கொள்ளையிட துப்பாக்கி மற்றும் கைக்குண்டுடன் வந்த கொள்ளையன் ஒருவனை 82 வயதான பாட்டி ஒருவர் தன்னந்தனியாக போராடி முறியடித்தார்.

கிராம வங்கி ஒன்றை துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்க முயன்று கொண்டிருந்த கொள்ளையனின் பின்புறம் பதுங்கி முன்னேறிய ஹெர்த்தா வாலெக்கர் என்ற பாட்டி அந்தக் கொள்ளையனின் முகமூடியைக் கிழித்தெறிந்து அவனிடம் இருந்த கொள்ளைப்பணத்தையும் பிடுங்கி "பணம் வேண்டுமென்றால் ஏதாவது வேலை செய்ய வேண்டியது தானே" என்று அவனைக் கடிந்தும் கொண்டார். தப்பித்தோம் பிழைத்தோம் என்று வெறுங்கையுடன் ஓடிய அந்தக் கொள்ளையனை பின்னர் பொலிஸார் கைது செய்தனர். (எ-11)

# போலி ஆவணங்களை பயன்படுத்தினால் 10 வருட பயணத்தடை விதிக்கப்படும்

## பிரித்தானிய அரசு எச்சரிக்கை

போலியான ஆவணங்களை பயன்படுத்தி பிரித்தானியாவிற்குள் பிரவேசிக்க முனையும் இலங்கையர்களுக்கு 10 வருட பயணத்தடை விதிக்கப்படும் என்று பிரித்தானியா எச்சரித்துள்ளது. கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்தின் ஊடக அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தானிய விசா பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனை வழங்கும் உத்தியோகபூர்வ முகவர்கள் யாரையும் பிரித்தானியா இலங்கையில் நியமிக்கவில்லை.

விரைவாக பிரித்தானிய விசாக்களைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த முகவர் நிலையங்களின் ஊடாக போலியான வங்கி அறிக்கை உள்ளிட்ட ஆவணங்கள் முன்வைக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக 10 வருட பயணத் தடை விதிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

நேர்மையான சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களை பிரித்தானியா வரவேற்கிறது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

எனினும் போலியான ஆவணங்களை பயன்படுத்துபவர்களை பிரித்தானியா ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது என்றும் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-11)


## செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




## தேவை

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்கும் கம்பனிக்கு உழவு இயந்திரச் சாரதிகள் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு:

வீ.வீ. கருணாரட்ண & கம்பனி
12A, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆ. பாலச்சந்திரன்
T.P. :- 0711712003 (776)

## Immediate Vacancy

D.M.I அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு Trainee Manager, Assistant Managers, Supervisors, Distributors தேவை. அனுபவம்/அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**தகுதி : A/L, O/L. வயதெல்லை : 18-35 வரை**

பயிற்சியளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.

பயிற்சியின் போது - **ரூ.12000 - 15000**

பயிற்சியின் பின் - **ரூ. 50000 க்கு மேல்**

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா.... முக்கியத்துவம் அளிக்கப்படும். தங்குமிட வசதியுண்டு.

**தொடர்பு இல: 0217200867**
**0775566224**

(773)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை,**
**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு.**

**வெளிவாரிப் பரீட்சைகள் -2010**

**கலைமுதற் தேர்வு - 2010 (வெளிவாரி)**

**புதிய நேர அட்டவணை தொடர்பான அறிவித்தல்**

மேற்படி பிற்போடப்பட்ட கலைமுதற் தேர்வு - 2010 ப்ரீட்சையினை எதிர்வரும் 06.11.2012 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 24.11.2012 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையையும், பரீட்சை அனுமதி அட்டையையும் 01.11.2012 (வியாழக்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

பதிவாளர்
16.10.2012

(C-1334)

## மரண அறிவித்தல்

# இரத்தினசபாபதி தியாகராஜா



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் முதலியார் அத்தியார் அருணாசலத்தின் மருமகனும் நீர்வேலி மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி தியாகராஜா 15.10.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி பொன்னாம்பிகை தம்பதிகளின் ஏக புதல்வனும், காலம்சென்ற மாணிக்கவாசகர் நாகம்மா தம்பதிகளின் மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், முத்துக்குமரன் (முத்து), காலம்சென்ற செல்வக்குமரன் (செல்வம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சிகாவின் அன்பு மாமனாரும், திருவாசகம், சத்தியபாமா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அத்தானும், நிரஞ்சனி, குணாளன் (லண்டன்) ஆகியோரின் சகலனும், தனுஜா, பிரியங்கா (மாணவிகள், கரந்தன் இராமு.வித்.), மயூரேசன் ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.10.2012) இன்று வியாழக்கிழமை பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

லக்சுமி வாசா,
மடத்தடி வீதி,
நீர்வேலி மத்தி, நீர்வேலி,

தகவல்: தி. முத்துக்குமரன் (முத்து)

(775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞானம்

மாடி வீடொன்றிலே வசதி படைத்த மனிதன் ஒருவர் இருந்தார். பெறுமதியான கார் ஒன்று அவரிடம் இந்தது. எங்கே போய் வருவதாக இருந்தாலும் இதிலேதான் போய் வருவார். அவரது கால் மண் தரையிலே பட்டதே கிடையாது. அவ்வளவு வசதி வாய்ப்பு.

அப்படியாக மாளிகையில் வாழ்ந்து வந்தவர். திடீரென ஒருநாள் இறந்து விட்டார். அதன் பின்னர் அவரைப் பற்றி அடுத்த ஊரிலே இரண்டு பேர் ஒருநான் காலையிலே கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் சொன்னார்கள்;

"அந்தப் பெரிய மனிதர் இருந்தாரே ....அவர் இந்த உலகத்தை விட்டு போய்விட்டார்" அப்படி என்று ஒருவர் போனார். இதற்கு அடுத்தவர் சொன்னார்; "எதிலே போனார்? "அவர் காரிலே தானே" என்றார். இதைக் கேட்ட மற்றவருக்கு சிரிப்பு வந்துவிட்டது.

இந்த உலகத்தை விட்டு நாம் போகும் போது..... எதை எடுத்துக் கொண்டு போகமுடியும். அனைத்தையும் அப்படியே பூமிக்கு சொந்தம் என்ற ஒரு கதையுடன் போக வேண்டியதுதான்.

இதிலே பெரிய மனிதன், சிறிய மனிதன் என்ற வித்தியாசம் இல்லை. வித்தியாசம் என்ற சொற்பதத்தை மனிதர்களாகிய நாம்தான் உருவாகிக் கொண்டோம்.

நான் பெரியவன்– நீ பெரியவன் என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள். ஞானம் வரும்போது... இந்த வித்தியாசம் மறைந்து விடும்.

ஒரு ராஜா இருந்தார். தான் ஒரு ராஜா என்ற நினைப்பும் தற்பெருமையும் எப்போதும் அவருக்கு உண்டு. அந்த ராஜாவும் ராணியும் ஒரு நாள் எங்கேயோ வெளியிலே போயிருந்தார்கள்.

அவரது அரண்மனையிலே ஒரு வேலைக்காரி! அந்த பெண்ணுக்கு என்ன வேலை? அரசனுடைய மஞ்சத்தைத் தயார் செய்து கொடுக்கும் வேலை.

அரசனுடைய படுக்கையைத் தயார் செய்வதென்பது சாதாரண விடயமல்ல. அதற்கு நீண்ட நேரம் செலவாகும். ஒரு நாட்டு ராஜா தூங்குவது என்றால் சாதாரணமான காரியமா?

முதலிலே ஒரு ஜமுக்காளத்தை விரிக்க வேண்டும். அதற்கு மேலே ஒரு மெத்தையை விரிக்க வேண்டும். பின்னர் அதன் மேலே காம்பு இல்லாத மலர்களைத் தூவ வேண்டும். இப்படியாக ஏழு அடுக்குகளை ஏற்படுத்தி அந்தப் படுக்கையைத் தயார் செய்ய வேண்டும்.

வழக்கம்போல அன்றும் அந்த வேலைக்காரப் பெண் ராஜாவினுடைய மஞ்சத்தைத் தயார் செய்தாள்.

வெளியே போய் இருந்த ராஜாவும் ராணியும் இன்னும் அரண்மனை திரும்பவில்லை.

"அவர்கள் இருவரும் வருவதற்குள் நானும் இந்தப் படுக்கையின் மேலே ஒரு ஐந்து நிமிடங்கள் தூங்கிப் பார்த்தால் என்ன? என்று ஒரு ஆசை. ஒரு ஐந்து நிமிடம் தானே என நினைத்து அந்த வேலைக்காரப் பெண் அதிலே ஏறி தூங்கிப் பார்த்தது பாவம்... அதிலே சுகமாகப் படுத்ததும் தூக்கம் வந்து விட்டது. அசந்து போய் குறட்டை விட்டு தூங்க ஆரம்பித்து விட்டாள். மெய் மறந்து தூங்கினாள்.

நான்கு மணி நேரம் கடந்த நிலையில் அரசனும் அரசியும் அரண்மனையை வந்தடைந்தார்கள். வந்து பார்த்தால் அழுக்கடைந்த உடையுடன் அந்த வேலைக்காரி மெய் மறந்து அரசனுடைய படுக்கையிலே நித்திரை செய்து கொண்டிருந்தாள்.

ராஜாவுக்கு கோபம் மேலிட்டது. நாம் எங்கே? இந்த வேலைக்காரி எங்கே? அப்படி என்ற நினைப்பு வந்து விட்டது.

உடனே கையைத்தட்டி காவலாளிகளை அழைத்தார். அந்த வேலைக்காரியை ஒரு தூணிலே கட்டி வைத்து சாட்டையாலே அடிக்கும்படி உத்தரவிட்டார். அவர்களும் ராஜாவின் கட்டளைக்கு அடிபணிந்து வேலைக்காரியை சாட்டையினாலே அடித்தார்கள். வேலைக்காரியோ அழவில்லை. ஒவ்வொரு அடிக்கும் அந்த பெண் சிரிக்க ஆரம்பித்தாள்.

ராஜாவுக்கு இதைப் பார்த்ததும் ஆச்சரியமாகி விட்டது. அந்த பெண்ணைப் பார்த்து "அழாமல் சிரிக்கிறாயே... ஏன்?" என்று ராஜா வினவினார்.

அதற்கு அவள் "உங்களின் படுக்கையிலே நான்கு மணி நேரம் தூங்கிய எனக்கு இத்தனை சவுக்கடி கிடைத்துள்ளது. வாழ்நாள் பூராகவும் இந்தப் படுக்கையிலே படுத்துறங்கிய உங்களுக்கு எத்தனை சவுக்கடி கிடைக்கப் போகிறதோ என்று நினைத்தேன். அதுதான் சிரிப்பு வந்து விட்டது" என்றார்.

அதைக் கேட்டதும் ராஜாவுக்கு அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது. மனம் மாறியது. தன்னுடைய செயலுக்காக வருத்தப்பட்டார். அந்தப் பெண்ணை விடுதலை செய்தார்.

அரசனுக்கு ஞானம் பிறந்த கதை இது எனச் சொல்லப்பட்டுள்ளது.

ஒரு பையனின் தாயார் வீட்டிலே லட்டு தயார் செய்து டப்பாவினுள் போட்டு வைத்திருந்தார். திடீரென அதிலிருந்து 10 லட்டுகள் காணாமல் போய் விட்டது. பையன் ஒரு லட்டை சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தாயார் கையும் களவுமாகப் பிடித்து விட்டார்.

உடனே தாயார் அந்தப் பையனை 10 தோப்புக்கரணம் வீதம் போடும் படியாகச் சொன்னார். பையன் காதைப் பிடித்துக் கொண்டு 20 தோப்புக்கரணங்கள் போட்டான். மீதி 80 எங்கே என்று கேட்டார் அம்மா.

"அதுபோட வேண்டியது நான் இல்லை– அப்பா" என்றான் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 178 ஆண்டுகள் பழமை வாய்ந்த பாடசாலையின் பரிதாபம்

## தீர்வு வழங்கப்படுமா?

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக மாணவர்களது பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1834 ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பாடசாலையானது 1984, 1993 ஆம் ஆண்டுகளில் சொந்த இடத்தில் இருந்து இடம்பெயர்ந்தது.

மீண்டும் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பல குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது. தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 152 மாணவர்கள் கல்வி கற்கும் இப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளுக்கு 5 நிரந்தர ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற வேளையில் ஒரு நிரந்தர ஆசிரியரே கடமை புரிகின்றார்.

கணனி வசதி இல்லை. கிணறு உண்டு. சுத்திகரிக்கப்படவில்லை. கிணற்று கட்டு மதில் உடைந்து விழும் அபாய நிலையில் உள்ளது. 2 மலசலகூடம் மட்டுமே உண்டு. தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களும் விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும், வர்த்தகம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து நிரந்தர ஆசிரியர்கள் இன்மை பெரும் குறைபாடாக உள்ளது.

அலுவலகதளபாடங்களும் மாணவர்களுக்குரிய தளபாடங்களும் பற்றாக்குறை. இரு தற்காலிக கொட்டகைகளிலேயே பாடசாலை இயங்கி வருகின்றது. நூலக வசதி, விஞ்ஞான ஆய்வு கூட வசதி, சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய பாடங்களுக்கான தனி அறை வசதி என்பன இன்மையால் சிரமப்பட வேண்டிய நிலை உள்ளது.

சுற்று மதில் இல்லாமையால் கால்நடைகள் அசுத்தம் செய்கின்றன. விளையாட்டு முற்றம் உபகரணம் இன்மையால் மாணவர்கள் விளையாட்டு துறையில் முன்னேற்றமடையாத நிலை உள்ளது.

பிரார்த்தனை மண்டபம் இன்மையால் மாணவர்கள் ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து வரும் ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதி இல்லை. அத்துடன் 30ற்கு மேற்பட்ட மாணவர்கள் நடந்து பாடசாலைக்கு வரவேண்டிய நிலையுள்ளது.

அத்துடன் மின்சார வசதி இன்மையால் மின்சாரத்தினூடாக செயற்படுத்தப்படும் வேலைகள். அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. எனவே, உரிய தரப்பினர் இத் தேவைகளை பூர்த்தி செய்து மாணவர்களது கல்விச் செயற்பாட்டிற்கு உதவுமாறு மாணவர்களது பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# மரம் நாட்டும் நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் ஓர் அங்கமாக நாளை வெள்ளிக்கிழமை மீசாலை நூலகத்தில் மரம் நாட்டும் நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை சபை உத்தியோகத்தர், ஊழியர்கள் சபை அங்கத்தவர்களினால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (அ-3-29)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50-70 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-90 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 70 |
| தக்காளி | 60 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 40 |
| கோவா | 100 | 70 | 80 |
| கரட் | 100 | 80 | 120 |
| பூசணி | 60 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 85 | 60 | 60 |
| பாகற்காய் | 140 | 110 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 70 |
| பயற்றங்காய் | 50 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 110 | 100 |
| பீற்றூட் | 70 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 70 | 110 |
| முருங்கைக்காய் | 70 | 90 | 40 |
| போஞ்சி | 100 | 110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 45 | -- | 40 |
| கீரை – 1 பிடி | 15 | 20-30 | 20 |
| தேசிக்காய் | 300 | 240 | 360 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 28-30 |

# இராசி பலன்

18.10.2012
(ஐப்பசி 02, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
திருதியை முற்பகல் 11.53 மணிவரை
அனுசம் பின்னிரவு 4.19 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
சதுர்த்தி விரதம்.

**மேடம்** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையலாம், வேலைச் சுமை கூடும்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** தேகாரோக்கியம் சீர் பெறும், தொழில் முன்னேற்றமுண்டு, விரோதங்கள் அகலும், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரும் நாள்.

**கடகம்** மங்கல நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் தோன்றும்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், தாய் வழியில் அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் விருத்தியுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படும் நாள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், பயணங்களால் பலனுண்டு, நேற்றைய பிரச்சினைகள் இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**துலாம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பியபடியே கிடைக்கும், குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சிந்தனைகள் தோன்றி மறையும்.

**தனுசு** பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக்கொள்வீர்கள், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், நண்பர்கள் வழியில் சிறு விரயங்கள் ஏற்படலாம்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், தனவரவு திருப்திகரமாக அமையும், கௌரவமான நாள்.

**கும்பம்** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை தலைவர் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

## பருத்தித்துறை பிரதேச சபையால் தீர்மானம் நிறைவேற்றம்

(கரவெட்டி)


நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் பரமலிங்கம் வசந்தகுமார் மீதான தாக்குதலை கண்டித்து பருத்தித்துறை பிரதேச சபையில் நேற்று முன்தினம் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் பரமலிங்கம் வசந்தகுமார் அண்மையில் தாக்கப்பட்டு காயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இவர் நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான பூங்காவுக்கான நிலம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டதும் இதற்கெதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார்.

இது தொடர்பாக பொலிஸாரின் விசாரணைக்கு சென்று திரும்பும்போது இத்தாக்குதல் இடம்பெற்றது. இச் செயற்பாட்டை கண்டித்து நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச சபையில் எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் பிரேரணையை கொண்டு வர அதனை எதிர்க்கட்சி உறுப்பினர் பொ.மணிதரன் வழி மொழிந்தார்.

இதற்கு சபை ஏற்றுக்கொள்ள கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் எதிர்காலத்தில் எச் செயற்பாடும் ஜனநாயக ரீதியில் இடம்பெற வேண்டும் எனவும் சபையில் வலியுறுத்தப் பட்டது. (அ-3-24)




நன்றி:-ஐலண்ட்

# நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தாக்கப்பட்டமைக்கு கவனயீர்ப்பு

## யாழ்.அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு






(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தாக்கப்பட்டதை கண்டித்தும் தாக்குதல்களை நடத்தியவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் கையொப்பமிட்டு யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

இந்த மகஜரை வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் நேற்று யாழ். நகரில் இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து அரச அதிபரிடம் கையளித்தார். அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

நல்லூர் பிரதேச சபைக்கு உரித்தான காணியை இராணுவத்தினர் அத்துமீறி கையகப்படுத்த முற்பட்டமையை ஆட்சேபித்து சட்டபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த தவிசாளர் தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றிய ஒருவர். இவர் மீதான தாக்குதல் ஏனைய உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் அச்சுறுத்தும் நடவடிக்கையாகவே எம்மால் நோக்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் பல தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக,காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வீடு தாக்கப்பட்டமை, வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர் தாக்கப்பட்டமை, சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வீடு தாக்கப்பட்டமை, வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் வீடு தாக் கப்பட்டமை, வலி. தெற்கு பிரதேச சபையின் புதிய கட்டடம் மீது கழிவு ஒயில் ஊற்றப்பட்டமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

இவ்வாறான தொடர் தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை முடக்குவதோடு ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியாக எம்மால் கருதப்படுகின்றது.

எனவே, இவ்வாறான செயல்கள் மேலும் இடம்பெறாதிருக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தங்களைக் கோருகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

## ஆங்கில டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனம் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து வடமாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்கான வகுப்புக்கள் மீண்டும் நாளை மறுதினம் (சனிக்கிழமை) காலை 9 .00 மணிக்கு மீள ஆரம்பிக்கப் படவுள்ளதாக பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணானந்தன் அறிவித்துள்ளார். (அ)

## சித்திரப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் மிருசுவில் பொது நூலகத்தினர் வாசிப்பை ஊக்கப்படுத்தும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை சித்திரப்போட்டி நூலக மண்டபத்தில் நடைபெறுமென நூலகர் சி.சிவாஜினி அறிவித்துள்ளார். (அ-9)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நான்காம் நாள் நிகழ்வில் கும்பபூசையின் மகிமை எனும் தலைப்பில் சைவப்புலவர் கந்த.சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் நடனப்போட்டிகளும் கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-9)

## நலன்புரிச்சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச வைத்தியசாலை நலன்புரிச்சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழு தெரிவும் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வைத்தியசாலை பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதேச பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (அ-9)




## கிராம அபிவிருத்திச் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.இடம்பெயர்ந்த காங்கேசன்துறை மத்தி, யா/234 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 18 வயதிற்கு மேற்பட்ட மக்கள் அனைவரையும் இக்கூட்டத்திற்குச் சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது. மேலும் இடம்பெயர்ந்த மக்களின் எதிர்கால நன்மை கருதி பல முக்கிய விடயங்கள் கலந்துரையாட வேண்டியுள்ளது. இக்கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் ஒவ்வொருவரும் நேரில் சமுகமளித்து கையொப்பமிட வேண்டும் எனவும் காங் கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையம் கேட்டுள்ளது.

☆☆☆☆☆☆☆☆

தையிட்டி வடக்கு ஜே/249, தையிட்டி தெற்கு ஜே/250 ஆகிய பிரிவு மக்களுக்கான கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே ஊடகங்களின் மூலம் அறிவிக்கப்பட்டு கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற தையிட்டி வடக்கு, தெற்கு இடம்பெயர்ந்தோருக்கான கலந்துரையாடலுக்கு அமைவாகவும் மாகாண கிராம அபிவிருத்தி ஆணையாளர், பிரதேச செயலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகர் ஆகியோரின் ஆலோசனைக்கமைவாகவே இப் பொதுக் கூட்டம் நடைபெறுகின்றது. மேற்படி பிரதேச மக்கள் அனைவரையும் இப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதுடன் தத்தமது அங்கத்துவச் சந்தாப்பணத்தையும் செலுத்தி ஒத்துழைக்கும்படி தையிட்டி கலைமகள், பராசக்தி சனசமூக நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திவிநெகுமவுக்கு ஆதரவாக நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம்

## உண்மை நிலை புரியாது மக்கள் தடுமாற்றம்




(யாழ்ப்பாணம்)

திவிநெகும அபிவிருத்தி திணைக்களமாக மாற்றமுறுதலை உடனடியாக செயற்படுத்தக்கோரி யாழ். நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து காலை 10 மணிக்கு ஆரம்பித்த து நண்பகல்12 மணி யளவில் கச்சேரியை சென்றடைந்தது.

இவ்ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதுகாப்போம். சமுர்த்தியினை பாதுகாப்போம்; வாழ்வுக்கு வழிகாட்டும் வல்லமையை வரவேற்போம்; வாழ்வையே அழிக்கும் வல்லமையை எதிர்ப்போம்; வருகிறது வாழ்வெழுச்சி அதனை வரவேற்போம்; அரசியல்வாதிகளே மக்களைப் பற்றி சிந்தியுங்கள்; புதுப்பானையில் பழைய கூழ் வேண்டாம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திக் கொண்டும் அரசிற்கு ஆதரவான கோஷங்களை எழுப்பிக் கொண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ் ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான சமுர்த்திப் பயனாளிகள்,சமுர்த்தி அதிகார சபையின் உயர்அதிகாரிகள் கலந்து கொண்டிருந்த போதிலும் அதில் பெருமளவிலானோர் ஆர்ப்பாட்டத்தின் உண்மை நோக்கம் தெரியாமலேயே கலந்து கொண்டிருந்ததாக தெரிய வருகின்றது.

இவ்வாறானதொரு ஆர்ப்பாட்டம் நடைபெறுமென எமக்கு முன்னரே தெரிந்திருந்தால் நாம் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருக்க மாட்டோம் என அங்கு நின்ற சில பெண்கள் தெரிவித்திருந்தனர். சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதாகவும் மற்றும் விவசாய விதை நெல் தருவதாகவும் கூறியே தாம் அழைக்கப்பட்டதாகவும் ஆனால் இங்கு என்ன நடக்கிறது என்று எமக்கு புரியவில்லை எனவும் தாங்கள் எதற்காக வரவழைக்கப்பட்டோம் என்பது கூட தெரியாமல் பயனாளிகள் தடுமாறினர்.

ஆர்ப்பாட்ட முடிவில் யாழ். மாவட்ட செயலகத்தின் முன்னால் சமுர்த்தி உத்தியோகத்தரினால் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிடமும் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடமும் மகஜர் கையளிக்கப்பட்டதோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடமும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடமும் அதன் பிரதிகள் கையளிக்கப்படவுள்ளன. (அ-4)

Cambridge Management College

OPEN DAY-21,22 October -2012

நேரம்- 9.00 முதல் 3.00 மணி வரை

யாழில் முதன் முறையாக UK இல் இருந்து வருகை தந்துள்ள ஆங்கிலேயர்களால் ஆங்கிலம் New Method இல் கற்பிக்கப்படுகின்றது.

Lecturers


Mr. Rob Horne
M.Phil in English
Qualified
Cambridge
Uni Examiner


Ms. Janette Smith
Master of
Education
(English)

தொழில் புரிவோர் (ஆசிரியர்கள், சட்டத்தரணிமார்கள், வர்த்தகர்கள்) பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள், வெளிநாடு செல்ல விரும்புவோர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், [கச்சேரி பஸ்நிலையம் அருகில்]
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com

## மின் விளக்குகள் கையளிப்பு

வவுனியா நகர சபையின் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் எஸ்.இராஜேஸ்வரனால் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு வீதி மின் விளக்குகள் கடந்த 15 ஆம் திகதி கையளிக்கப்பட்டன.

வவுனியா நகரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டு உறுப்பினர்களுக்கு தலா 40 மின்விளக்குகள் கைய்ளிக்கட்டிருந்த நிலையிலேயே இவ் உறுப்பினர் பாடசாலையின் வேண்டுகோளுக்கிணங்க 6 மின்விளக்குகளை கையளித்திருந்தார். (அ-9-266)

## வாசிப்பு மாத போட்டிகள்

சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் சாவகச்சேரி மீசாலை பொது நூலகங்கள் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தும் வாசிப்புப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும் கட்டுரைப்போட்டி மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில்நடைபெறவுள்ளதென பிரதம நூலகர் வே. வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பழைய மாணவரும் வேலணை மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் துணுக்காய் தேராங்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஆசிரியருமாகிய நடராஜா பஞ்சசீலன் அவர்கள் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டமையை பாராட்டுவதுடன் இவர் மேலும் பல உயர் பதவிகள் பெற வாழ்த்துகின்றோம்.

அப்பா-நடராஜா (நடராஜா புடைவையகம்), அம்மா- நாயகி,
அண்ணா- வாசவன் (U.K), அண்ணி-கங்கா (U.K),
தங்கை- கௌரி, தம்பி- கவி, பெறாமகள்- அஸ்மிதா (U.K)

(774)

## நிர்வாகிகள் தெரிவு

கல்லியங்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகச் சபைத் தெரிவு கடந்த 14 ஆம் திகதி கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்க மண்டபத்தில் நடைபெற்றது.இதில் தலைவராக சுந்தரம் செல்வரெட்ணம், செயலாளராக மகாலிங்கம் சிவானந்தன், பொருளாளராக சோமசுந்தரம் சிவகுமார், உபதலைவராகசிவகுமார் தர்மராணி, உபசெயலாளராக சோமசுந்தரம் தர்சினி ஆகியோரும்மேலும்பத்து நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர். (அ-9)

### சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி கோரல்

மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைகள் குழுத்தலைவரால் சுகாதார அமைச்சு வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கான கேள்வி கோரப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விலை மனுதாரர் கேள்வி கோரல் படிவத்தினை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100 /= செலுத்தி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் 25.10.2012 இற்கு முன்னர் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர், பெறுகைகள் குழு
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்,
சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம். 0212220301

(சு/1333)

### மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு:- 1976 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-திருவோணம் 3
உயரம்:-5'9"
கி.பா:-55, 12 இல் செவ்.
தொழில்:-சொந்த வாணிப நிலைய உரிமையாளர்
B/409

பிறப்பு:- 1968 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அச்சுவினி 4
உயரம்:-5'9"
கி.பா:-13
தகைமை:-A/L (கனடா பிரஜை)
B/484

பிறப்பு:- 1973 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-மூலம் 1
உயரம்:-5'8"
கி.பா:-51.25, 8 இல் செவ்.
தொழில்:-சொந்தவியாபாரம், விவாகரத்துப் பெற்றவர்
B/591

பிறப்பு:- 1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-உத்தரட்டாதி
உயரம்:-5'5"
கி.பா:-19.25, 12 இல் செவ்.
தொழில்:- கணித ஆசிரியர்
B/566

**மணமகன் தேவை**

பிறப்பு:- 1978 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- சதயம் 1
உயரம்: 5'
கி.பா:-27, 4 இல் செவ்.
தகைமை: A/L
G/086

பிறப்பு:- 1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- சித்திரை 2
உயரம்: 5'1"
கி.பா:-8.75
தொழில்:பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை
G/087

பிறப்பு:- 1980 றோமன் கத்தோலிக்கம்
உயரம்: 5'2"
தொழில்:- தனியார் பள்ளி ஆசிரியை, சாதக குறிப்பும் இல்லை. சாதகமும் பார்ப்பதில்லை.
G/073

பிறப்பு:- 1985 இந்து வேளாளர்
நட்சத்திரம்: உத்தராடம் 2
உயரம்: 5'7"
கி.பா: 33
தொழில்:-STATISTIC Phd அமெரிக்க மாணவி
G/224

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊட்க அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியில் காற்றுடன் கடும் மழை; வன்னியில் வாழும் மக்களின் நிலை?

மன்னாரில் நீண்ட வரட்சியின் பின் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்ய ஆரம்பித்திருக்கின்றது. இவ்வருட ஆரம்பம் தொடக்கம் நாட்டின் வடபகுதிக்கு கிடைக்க வேண்டிய பருவ மழை கிடைக்காத நிலையில் கடும் வரட்சி நிலவி வந்தது.

இதன் காரணமாக ஆறுகள், நீர்நிலைகள், கிணறுகள் என்பன நீர் இன்றி பெரும் வரட்சியானதொரு காலநிலையே காணப்பட்டு வந்திருக்கின்றது.

இம்மாத ஆரம்பம் தொடக்கம் பகல் பொழுதில் கடும் வெப்பம் நிலவி வந்த நிலையில் தற்போதைய பருவ மழை நேற்று முன்தினம் தொடக்கம் இடிமுழக்கத்துடன் ஆரம்பித்திருக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஆரம்பித்திருக்கும் பருவ மழையினால் பிரதேசத்தில் வசித்து வரும் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இது சாதகமானதாக அமையலாமென எதிர்பார்க்கின்றனர்.

இது இவ்வாறிருக்க வன்னிப் பிரதேசத்தின் பெருநிலப்பரப்பு பகுதியில் மக்கள் மீள் குடியேற்றப்பட்ட நிலையில் தற்போது ஆரம்பித்திருக்கும் பருவமழையின் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் பாதிப்படையக் கூடிய வாய்ப்பிருப்பதாக தெரிய வருகின்றது.

மக்கள் மீள்குடியேறிய கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் அதிகமானவர்களுக்கு இன்னமும் வீட்டுத்திட்டம் முறையாக வழங்கப்படாத நிலையில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் பருவ மழையின் காரணமாக வீடுகள் இல்லாமல் கூடாரங்களுக்குள் வாழும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களில் அநேகமானோர் இன்னமும் வழங்கப்பட்ட அரை நிரந்த வீடுகள் மற்றும் தற்காலிக வீடுகளில் வாழ்ந்துவரும் நிலையில் தற்போது தொடங்கியுள்ள பருவமழையினை எதிர்கொள்ள முடியாத நிலையில் அவர்களது இருப்பிடங்கள் காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது. (அ-2)

## புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும்

(புளியம்பொக்கணை)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேச சபையின் முரசுமோட்டை பொதுநூலகத்தினாலும் கிளி/முருகானந்தா கல்லூரியினாலும் இணைந்து நடத்தப்படும் புத்தக கண்காட்சியும் யாழ்.புத்தக கூடத்தின் புத்தக மலிவு விற்பனையும் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் முருகானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே, அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (அ-3-263)

# தமிழக மீனவர்கள் மீண்டும் விரட்டியடிப்பு; வலைகளை அறுத்து அட்டூழியம்

(கொழும்பு)

இந்திய கடல் எல்லையான கச்சதீவு அருகே மீன்பிடிக்கும் இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இது தொடர்பாக பலமுறை இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் எந்தவித பயனும் ஏற்படவில்லை. இதனிடையே இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 600 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

இவர்கள் மீன்வளம் மிகுந்த இந்திய இலங்கை கடல் எல்லையில் நேற்று முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் திரும்பி செல்லுமாறு எச்சரித்தனர்.

மேலும் அவர்கள் துப்பாக்கியை காட்டி மிரட்டி மீனவர்களை விரட்டினர். மீனவர் ஒருவரின் படகில் ஏறி அதிலிருந்த மீன்பிடி வலைகளை அறுத்து கடலில் வீசினர். மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் பறித்துக் கொண்டனர். உடனே உயிர் தப்பினால் போதும் என்று நினைத்த இராமேஸ்வரம் மீனவர்கள் அங்கிருந்து படகுகளுடன் கரைக்கு திரும்பினர்.

இது குறித்து மீனவர்கள் கூறுகையில், இலங்கை கடற்படையின் அட்டூழியத்தால் எங்கள் கடலில் மீன்களை பிடிக்க முடியவில்லை.

இதனால் நாங்கள் பல நேரங்களில் வெறும் கையுடன் கரைக்கு திரும்பும் அவல நிலை உள்ளது. இதேநிலை தொடர்ந்தால் எங்கள் வாழ்க்கையே கேள்விக்குறியாகி விடும்என்று கவலையுடன்தெரிவித்தனர். (அ-2)

# இராணுவத்தை அரசாங்கம் வாபஸ் பெற உலகநாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## கண்டன அறிக்கையில் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

நல்லூர் பிரதேச சபைத்தலைவர் ப.வசந்தகுமார் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட ஈவிரக்கமற்ற தாக்குதல் மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும் என தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர், வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். இந்த தாக்குதல் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாம் எங்கே செல்கிறோம் யாரால் வழி நடத்தப்படுகின்றோம் என்பதை அறியாமல் நம் ஒவ்வொருவரையும் பீதியுடன் வாழும் நிலையை இத்தாக்குதல் புலப்படுத்தி நிற்கின்றது.

பிரதேச சபைத் தலைவர் ஒரு சமூகத் தொண்டர். சமூகப்பணியிலேயே ஈடுபட்டுள்ளார். அவர் ஏன் தாக்கப்பட்டார் என்பது அனைவருக்கும் புரியும். யார் தாக்கியிருப்பார்கள் என்பதும் புரியாமல் இல்லை. யாரால் தூண்டப்பட்டு இச்சம்பவம் நடந்ததென்றும் அறிய முடியாததல்ல.

ஒன்றை மட்டும் அரசு உணர வேண்டும். இதை யார் செய்திருந்தாலும் அதற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். மக்களுக்கு பாதுகாப்பு தருவதற்காக அல்ல உபத்திரவம் தருவதற்காக படைமுகாம்கள் தொடர்ந்து அமைக்கப்பட்டு வருவதோடு வலுப்படுத்தப் பட்டும் வருகின்றன? இதனை ஏற்க முடியாது. மக்களால் பொறுத்துக் கொள்ளவும் முடியாது. நாட்டில் அமைதியை குலைக்கும் இச் செயல்வீரர்கள் நம் மத்தியில் இருக்கும் வரை அமைதி, சமாதானம், மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை என்பதெல்லாம் வெகு தூரம் மட்டுமல்ல. தமிழ் மக்களுக்கு நிரந்தர அடிமைத்தனத்தையும் பீதியையும் ஏற்படுத்தும் விடய்முமாகும்.

அரசு உடனடியாக இராணுவத்தை வாபஸ் பெற நடவடிக்கை எடுக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுதான் இப்போது தமிழ் மக்கள் அனுபவிக்கும் வேதனை தீர எடுக்க வேண்டிய முதற்கட்ட நடவடிக்கையாகும் என அதில் அவர் குறிப்பிட்டார். (அ-2)



# தேசியமட்டப் போட்டிகள்

(சிவநகர்)

மாகாணமட்டத்தில் நடைபெற்ற ஆங்கில தினப்போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தேசிய மட்டப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொழும்பு தேஸ்ரன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தரம் 10 மாணவி கீர்த்திகா கணேசமூர்த்தி கிளிநொச்சி இந்துக்கல்லூரி, தரம் 8 மாணவி ஜெலானி ஆனந்தராசா கிளி/பற்றிமா றோ.க.த.க.பாடசாலை, தரம் 5 மாணவி பிரசாந்தினி சூரியகுமார் கிளி/பரந்தன் இந்துக்கல்லூரி இம் மாணவிகளை போட்டி நடைபெறும் நேரத்திற்கு முன்னரே போட்டி நடைபெறும் இடத்திற்கு சமுகமளிக்குமாறு கிளி.வலயக்கல்வி பணிப்பாளர் க.முருகவேள் அறிவித்துள்ளார். (அ-3-254)




யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாகராசா கௌரவிக்கப்பட்டார். நல்லை ஆதீனத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பிகை அருளாளன்எனும்பட்டமும் அவருக்குவழங்கிகௌரவிக்கப்பட்டது.

கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் உரையாற்றுவதையும் அருகில் விழா நாயகன் உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலாநிதி க.குணராசா உரையாற்றுவதையும் விழா நாயகன் கௌரவிக்கப்படுவதையும் யாழ்.இலக்கிய வட்டசெயலாளர் நயினை கி.கிருபானந்தா எழுதிய அப்பாவின் கடிதங்கள்... எனும் நூலின் பிரதியை விழா நாயகர் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்

# 17.10.2012 - 16.11.2012



## சிம்மம்

மகம், பூரம், உத்தரம்
1 ஆம் பாதம்

# நிகழ்காலத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்; தொட்ட காரியங்களில் துரிதமாக வெற்றி கிடைக்கும்

**வெற்றிப்பாதைக்கு வித்திடும்!**

**திடீர் திடீரென முடிவுகளை மாற்றிக் கொள்ளும் சிம்ம இராசி நேயர்களே!**

மிகப்பெரிய பொறுப்பைக் கொடுத்தால்கூட எளிதில் முடித்துக் காட்டுவீர்கள். முயற்சிக்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள் நீங்கள். தனக்கு நிகர் தானே என்ற பெருமையுடன் வாழ்க்கை நடத்துவீர்கள். பலரையும் கட்டிக்காக்கும் நிர்வாகத் திறமை உங்களுக்கு உண்டு. பிறருடைய எதிர்ப்புகளைக்கண்டு சிறிதும் அச்சம் கொள்ளாமல் போராடி வெற்றிபெறுவீர்கள். பணிவே துணை என்று வாழ்பவர்களுக்கு மத்தியில் துணிவே துணை என்று வாழ்பவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சூரியன் நீச்சம் பெற்று சுக்கிர கிரகத்தோடு பரிவர்த்தனையாகிகி நீச்ச பங்க ராஜயோகத்தைப் பெற்றிருப்பதால் நினைத்த காரியங்கள் நினைத்தபடியே நடக்கும். நிகழ்கால தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். தொட்ட காரியங்களில் துரிதமாக வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள் இனி தோல் கொடுத்துதவுவார்கள். வருங்கால நலன் கருதி புதிய திட்டம் தீட்டி வளர்ச்சி காண்பீர்கள். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். ஊர் மாற்றம், இடமாற்றம் மட்டுமல்ல உள்ளத்திலும் சில மாற்றங்கள் ஏற்பட்டு நல்லவர்கள் என்று பெயர் எடுத்துக்கொள்ள யோசிப்பீர்கள். 10 இல் குரு சஞ்சரிப்பதால் பதவி மாற்றம், இடம் மாற்றம் தொழில் மாற்றங்கள் போன்றவைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

என்ன இருந்தாலும் இப்பொழுது நடைபெறும் வக்ர குருவின் ஆதிக்கம் நல்ல பலன்களையே உங்களுக்கு வாரி வழங்குவார். வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே என்ற குரு கவசத்தைப் பாடி வெள்ளிக்கிழமை தோறும் நாக கவசமும் பாடி இராகு கேதுவையும் வழிபட்டால் வாய்ப்புகள் வாயிற்படிதேடி வந்துகொண்டே இருக்கும்.

**சுகம் தரும்**
**சுக்கிர பெயர்ச்சி!**

சுக்கிரன் ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசியில் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக செயல்களிலும் சிந்தனைகளிலும் மாறுபாடுகள் ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகும். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். சகோதர உறவில் சமரசம் ஏற்பட்டும் அவர்களாகவே விலகிக் கொள்ள முன்வருவர். வாங்கல், கொடுக்கல்களில் இருந்த கடன் சுமை பாதிக்குமேல் குறையும் அரசியல் மற்றும் பொதுநல ஈடுபாடுகள் கொண்டவர்களுக்கு திடீர் பொறுப்புகளில் மாற்றங்கள் ஏற்படலாம். பெண்வழிப் பிரச்சினைகளுக்கு சுமூகமான முடிவு ஏற்படும்.

**சொத்துக்களால் இலாபம்**
**கிடைக்கும் நேரம்!**

எதிர்வரம் நவம்பர் 6 ஆம் திகதி தனுசு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். யோகாதிபதி 5 இல் சஞ்சரிக்கும் பொழுது பூமியோகம் கிடைக்கும். பூர்வ புண்ணியத்தால் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய சொத்துக்கள் வந்து சேர்வதற்கான அறிகுறிகள் தோன்றும். அதில் நடந்த வழக்குகளைக் கூட வாபஸ் பெற்றுக் கொண்டு சமரசம் செய்து கொள்ள உறவினர்கள் ஒத்துவருவர்.

இந்த மாதம் சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச்சென்று வழிபட்டு வருவதோடு வாரந்தோறும் வியாழக் கிழமை குரு-தெட்சணாமூர்த்திக்கு அரச்சனை செய்து வழிபட்டு வந்தால் அனைத்துக்காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

இம்மாதம் வளர்ச்சி கூடும் மாதமாகவே அமைகிறது. மனச் சோர்வு அகலும் மகழ்ச்சி வந்து சேரும். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். பகலிரவாக பாடு பட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும். குழந்தைகளின் கல்வி நலன் கருதியும் கல்யாண வாய்ப்புகள் கருதியும் எடுத்த முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும். கணவரின் ஒத்துழைப்போடு செயலாற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்த நடந்துகொள்வர். பழைய நகைகளைக் கொடுத்துவிட்டு புதிய நகைகளை வாங்கி மகிழ்வீர்கள். பொதுநல ஈடுபாட்டில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகளைப் பெற்றுக்கொள்ள நேரிடும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## கன்னி

உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்,
அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

# பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர்; புதிய திருப்பங்கள் பலவற்றை சந்திப்பீர்கள்

**இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும்!**

**நிதானத்தோடு நடந்து கொண்டால் நிச்சயம் வெற்றி கிட்டும் என்று சொல்லும் கன்னி இராசி நேயர்களே!**

மற்ற மனிதர்களைப் போல பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் என்றிருக்காமல் ஏதாவது சாதனை செய்ய வேண்டும் என்று விரும்புவீர்கள். வேகமும், விவேகமும் கொண்டிருப்பீர்கள். எந்தப் பொருளையும் வீணாக்குவது என்பது உங்களுக்குப் பிடிக்காது.

உங்களுக்கு இந்த ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது 4 கிரகங்கள் கூட்டுக் கிரகமாக குடும்ப ஸ்தானத்தில் கூடி சஞ்சரிக்கின்றன. இதன் விளைவாக நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் கைகூடி வருகின்றன. பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

சொத்துக்களை விற்பதன் மூலம் கிடைத்த ஆதாயத்தைக் கொண்டு புதிய தொழிலுக்கான முதலீடுகளை செய்யலாமா? என்று சிந்திப்பீர்கள். வாழ்க்கை தேவைகள் பூர்த்தியாகும். இதுவரை ஜென்ம சனியின் ஆதிக்கத்தில் சிக்கியிருந்த உங்களுக்கு உடலால் தொல்லைகளும் உள்ளத்தால் கவலைகளும் நிறையவே ஏற்பட்டு இருக்கலாம்.

குருவின் பார்வை வக்ர இயக்கத்தில் இருக்கும்பொழுதுதான் மிகுந்த நற்பலன்களைக் கொடுக்கும். குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கிணங்க அதன் பார்வை உங்கள் இராசியில் பதியும் பொழுது தடைகள் அகலும். தனவரவு கூடும். இடையூறுகள் செய்தவர்கள் உங்களை விட்டு விலகுவர். இலாபம் தராத தொழில்கள்கூட இனி இலாபம் தரத்தொடங்கும். என்ன இருந்தாலும் இன்னும் ஏழரைச்சனியின் ஆதிக்கம் இருப்பதால் சனிக்கிழமை தோறும் சனி கவசம் பாடி, சனீஸ்வர வழிபாட்டினை முறையாக செய்வது நல்லது.

**சுகம் தரும் சுக்கிர பெயர்ச்சி**

ஒக்டோபர் 23 ஆம் திகதியில் கன்னி இராசியில் சுக்கிரன் நீச்சம் பெறப்போகிறார். தனாதிபதி உங்கள் இராசியில் சஞ்சரிக்கும்பொழுது தனவரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். இனத்தார் பகை மாறும். இல்லம் கட்டி குடியேறவேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும் உறவினர்கள் உதவிக்கரம் நீட்ட முன்வருவர். பகை நட்பாக மாறும் சூழ்நிலை அமையும். இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முடிவுகள் வெற்றி தரும்.

**விழிப்புணர்ச்சியோடு இருக்க**
**வேண்டிய நேரம்!**

எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதியில் தனுசு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக உத்தியோக முயற்சியில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய உத்தியோக வாய்ப்புகள் கைகூடும். ஊதிய உயர்வு மற்றும் அரசு வழி சலுகைகள் கிடைப்பதில் இதுவரை இருந்த தாமதம் இனி அகலும். மன சஞ்சலங்களும் அகலும். மருத்துவ செலவுகள் குறையும். பெற்றோர் வழியில் சில செலவினங்கள் உண்டு.

உங்கள் இராசிக்கு 3, 8 க்கு அதிபதியாக செவ்வாய் விளங்குவதால் சில விலையுயர்ந்த பொருட்களை விற்க நேரிடலாம். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். இதுபோன்ற நேரங்களில் அங்காரகன் வழிபாடும், அனந்த சயன பெருமாள் வழிபாடும் உகந்ததாக அமையும்.

இம்மாதம் சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது. குறிப்பாக மாருதி வழிபாட்டை புதன்கிழமை தோறும் மேற்கொண்டால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இம்மாதம் சனி சாதகமானநிலையில் உலா வருவதால் படிப்படியாக முன்னேற்றங்களை காண்பீர்கள். செய்தொழில், வியாபாரத்தில் சீரான நிலை உண்டாகும். பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர். புதிய திருப்பங்கள் பலவற்றையும் சந்திப்பீர்கள். சுக்ர பெயர்ச்சிக்கு பின்னால் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். வீடு மாற்ற சிந்தனைகள் வந்து கொண்டே இருக்கும். செவ்வாய் விரதமும் அங்காரக வழிபாடும் செல்வ நிலையை உயர்த்தும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சினை தீர்த்துக் கொள்ளப்படவேண்டும்

இஸ்ரேலுக்கும் -பாலதீனத்துக்கும் இடையில் காணப்படுகின்ற நீண்டகால முரண்பாடுகள் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி பாலித கோஹன மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே அவர் இது தொடர்பில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அறிக்கை ஒன்றை விட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் இடம்பெற்ற மத்திய கிழக்கு நிலைமை தொடர்பிலான கருத்தாடலின் போது பாலித கோஹன மீண்டும் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.


இஸ்ரேலுக்கும் பாலதீனத்துக்கும் இடையில் நீண்டகால பிரச்சினை காணப்படுகிறது.இதுவே மத்திய கிழக்கின் பதற்ற நிலைக்கு முக்கிய காரணம். எனவே மத்திய கிழக்கு நாடுகளில் சமாதானமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் முதலில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாடுகளுக்கு இடையிலான முறுகல் நிலை தீர்க்கப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# நவராத்திரி

உன் வருகை எப்போது?
வீரத்தின் தெய்வமாய்
சூலத்தின் வழியாய்
பாவத்தை அழித்து
ஞாலத்தை காப்பவளே

முச்சூலம் வழியாய்
முக்குணத்தை அழித்தே
மகிஷம் மீதேறி
மனதில் கொலுவேற
முத்தேவியில் முதல்வளாய்
வீரத்தை தருபவளே
அண்டங்களை காப்பவளே

ச.சுபபிரியன்
தரம் 5D
யா/இ.ஆ.பா



## முன்னாள் முதலமைச்சர்

# பேர்டிக்கு எதிராக முறையிட நடவடிக்கை

வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்காவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள் ளது.

அநுராதபுர மாவட்டத்தில் 67 நீர்ப்பாசன குளங்களை அபிவிரு த்தி செய்வதற்காக 110 மில்லியன் ரூபா ஊழலில் ஈடுபட்டார் என்பது தொடர்பிலேயே மக்கள் விடுதலை முன்னணி வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சருக்கு எதிராக முறைப்பாடு செய்யவுள்ளது.

இது தொடர்பில் விசாரணை களை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை பிரிவின் அறிக்கை கட ந்த 2010 நவம்பர் 25 ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்கப்பட் டுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் வடமத்திய மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

எனினும் முன்னாள் முதலமை ச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக் காவிற்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட் டார்.

இதேவேளை, 2006 ஆம் ஆண்டு மாவிலாறு நீர்ப் பிரச் சினை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்டஈடு கொடு ப்பனவில் இடம் பெற்ற ஊழல் தொடர்பிலும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவில் முறைப்பாடு செய் யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மூன்று கல்வி வலயங்களுக்கு ஆசிரியர் விடுதி அமைக்கப்படும்

## ஆளுநர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மடு, துணுக்காய் கல்வி வலயங்களிலும் முதற்கட்ட மாக 2013 ஆம் ஆண்டின் இறு திக்குள் வடமாகாண அபிவிருத்தி க்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியில் ஆசிரியர் விடுதி நிர்மாணிக்கப்ப டவுள்ளது. மேலும் மாகாண ஆசிரி யர்களின் போக்குவரத்து பிரச்சி னைகளை கருத்திற் கொண்டு 5 பேருந்துகளும் கொள்வனவு செய் யவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் தெரிவு செய் யப்பட்டுள்ள மாதிரி கல்வி வலயங் களின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தி லுள்ள ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இக்கலந்துரையாடலில் மடு, துணுக்காய் கல்வி வலயங்களில் 2009-2012 வரையான காலப் பகுதியில் குறித்த வலயங்களில் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங் கள் தொடர்பாக உரிய வலயக் கல் விப் பணிப்பாளர்களினால் எடுத்து ரைக்கப்பட்டது.

குறித்த கல்வி வலயங்களில் ஆசிரியர் பரம்பலில் உள்ள குறை பாடுகளை உடனடியாக நீக்குமாறு ஆளுநர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதில் வடமாகாண அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பூதாகரமாக உருவெடுக்கும் இளவயதுக் கருத்தரிப்பு

தனிமனித நடத்தைகள் எதிர்நிலைக்கு தள்ளப்பட்டாலும் பொதுவான நடத்தைகளில் இருந்து வேறுபடுதல் மனித இருப்போடு இணைந்த தோற்றப்படாகும். இருபத்தொராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தமது வாழ்வு பற்றிய திட்டமிட்ட எதிர்பார்ப்புக்களை தேடிக்கொண்டிருக்கின்றனர். இதன் பின்னணியில் சமூக விழுமியங்கள், நியமங்கள், சமூக கட்டுப்பாடுகள், சமூக கட்டமைப்புக்கள் போன்றவற்றில் மாற்றங்கள் வேண்டப்படும் ஒன்றாகவும் அம் மாற்றங்களை எவ்வாறு நுகருகின்றனர் என்பதற்கமைவாகவே தனியன்களினதும் சமூகத்தினதும் நிலைப்புத்தன்மை தீர்மானிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஒரு சமூகம் நவீன மயப்படுத்தப்படும் போது அதனை உள்வாங்குவதற்கான அறிவும் கூடவே வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். சமகாலத்தில் காணப்படுகின்ற தோற்றப்பாடுகளாக இளவயது திருமணம், போதை நுகர்ச்சி, இளம்குற்றவாளிகள், முதியோர் புறக்கணிப்பு, இளையோர் குழு மோதல். வறுமை ஊடங்களும் வன்நடத்தை தூண்டலும் சீதன அழுத்தங்கள் விபத்துக்களின் அதிகரிப்பும் உடல் ஊனமுறுதலும் குடும்பச் சிதைவு, உளநல வீழ்ச்சி, விலகல் நடத்தை, தொழில்நுட்ப மாற்றங்களும் கல்வியும் போன்றவை காணப்படுகின்றன.

மனிதன் பெறுமதி மிக்கவனாக இருப்பதற்குரிய காரணம் மனிதத்தன்மையுடன் மனித விழுமியங்களை பேணி வாழக்கூடிய அதி உயர்ந்த ஆற்றலாகும். தனது அதி உயர்ந்த பெறுமானத்தை இழந்துவிட்ட நிலையை தற்கால வாழ்வியல் புலப்படுத்துகின்றது. இதனால் இளவயதுக்கர்ப்பம் என்பது அதிகமாக காணப்படுகின்றது.

முன்வாலிபப் பருவத்திலும் வாலிபப் பருவத்தினை அடைந்தவர்களும் காதல் வசப்படல் பருவ இன்பம் போன்றவை இயற்கையானவையாகவே காணப்படும்.

மனிதனில் உள்ள ஓமோன்களின் உயிரியல் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் ஓர் இனம் புரியாத உள்ளக்கிளர்ச்சியை உண்டு பண்ணுவதன் மூலம் இளம் தலைமுறையினரிலிருந்து அனைவரும் செய்வதறியாது தத்தளிக்கின்றனர். இதனால் ஏற்படும் ஓர் வித்தியாசமான கவர்ச்சி உந்துதலை காதல் என எண்ணி அதற்கு அன்பு என்ற உயர் மதிப்பினை கொடுத்து தன்னையும் தன் வாழ்வினையும் இழக்கின்றனர்.

அன்பு என்ற ஓர் ஈர்ப்பினை பின்வருமாறு பிரித்துப் பார்க்கலாம்.

சாதாரண மோகம், கவர்ச்சி மோகம், உண்மை அன்பின் பரிமாணம், பால் உறவில் ஈடுபாட்டுணர்வு, உண்மையான அன்பினை சரியாக அடையாளம் கண்டுகொள்பவர்கள் சிலரே இவ்வாறான உள்ளக்கிளர்ச்சியினால் பலவகையான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன பிரதானமானதாக

### இளவயதுக்கர்ப்பம்

இளவயதுக்கர்ப்பமானது இளவயதுத் திருமணம், திருமணத்திற்கு முன் கருத்தரித்தல் எனும் இரண்டு வழிகளில் ஏற்படுகின்றது. இளவயதுத் திருமணமானது குடும்பச் சூழல், சமூகச்சூழல், வாழ்க்கை முறைகள் பற்றிய தெளிவின்மை, பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவற்றால் ஏற்படுகின்றது. இவ்வகையானது சட்டசமூக ரீதியான அடிப்படையில் இடம்பெறும் திருமணங்களாகவும் இவ் அடிப்படையை பின்பற்றாத திருமணங்களாகவும் அமைகின்றன. இளவயதுக் கர்ப்பத்தினால் உடல், உள, குடும்ப சமூக ரீதியில் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

### உடல் ரீதியான பாதிப்பு

இதனை தாய்க்கு ஏற்படும் உடல் ரீதியான பாதிப்பு, சிசுவுக்கு ஏற்படும் உடல் ரீதியான பாதிப்பு எனும் இரு வகைப்பாட்டிற்குள் அவதானிக்கப்படுகின்றது.

தாய்க்கு ஏற்படும் உடல் ரீதியான பாதிப்பு எனும் போது இளவயதில் கருத்தரித்தல் இடம்பெறும் போது கர்ப்பப்பை போதிய வளர்ச்சி யுறாததால் கருச்சிதைவு ஏற்படல். அதிகரித்த அளவில்கர்ப்பகாலகுருதிச்சோகை, கர்ப்பகால குருதி அமுக்கம், கர்ப்பகால நீரிழிவுநோய், பிறப்புக் கால்வாய், இடுப்பென்பு போதிய வளர்ச்சி அடையாதிருப்பதனால் சத்திரசிகிச்சை பிரசவமும் அதனால் ஏற்படக் கூடிய மேலதிக நோய்கள் இளம் வயதில் உடலுறவு கொள்வதனால் கர்ப்பப்பையின் கழுத்தில் புற்றுநோய் ஏற்படுத்தல் போன்றன ஏற்படுகின்றன.

இவற்றுடன் திருமணத்திற்கான சான்று இல்லாத போது கருத்தரிப்பு இடம்பெறும் போது பெற்றோர், உறவினர்கள், நண்பர்களின் கவனிப்பின்மையால் போதிய உணவு வகைகளை கர்ப்ப காலத்தில் பெற முடியாத போது கை, கால் நடுக்கம், தலைச்சுற்று, களைப்பு போன்றவையும் பிரசவ காலத்தின் போது தாய், சேய் இருவருக்கும் ஆபத்தும் ஏற்படுகின்றன.

குழந்தைக்கான பாதிப்புக்கள் எனும் போது பிறப்பு நிறை குறைவு, சிசு மரணம், தாயின் போசாக்கு குறைவால் மூளை விருத்தி அற்ற குழந்தையின் பிறப்பு, குழந்தையின் பிறப்பை பதியமுடியாமை, தாய் மன உளைச்சலுக்கு ஆளாவதால் குழந்தையின் பராமரிப்பு குறைவடைகின்றமை போன்றன ஏற்படுகின்றன.

### உள ரீதியான பாதிப்பு

பயம், துக்கம், விரக்தி, தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு போன்ற உள ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இவை தற்கொலை எண்ணம் உருவாக வழியமைத்துக் கொடுக்கின்றது.

### குடும்ப,ச மூக ரீதியிலான பாதிப்பு

குடும்பம், சமூகம் என்ற அடிப்படையில் நோக்கும் போது குடும்பத்தில் பிரிவுகளும் விலக்குகளும் ஏற்படுதல், குடும்பத்தில் அடிக்கடி சண்டை ஏற்படுதல், குடும்ப அங்கத்தவர்களின் இம்சைக்கு ஆளாக்கப்படுதல் போன்றவையும் சமூக மட்டத்தில் சமூக நிறுவனங்களுடனான செயற்பாடுகளிலிருந்து குறிப்பிட்ட தனியன், குடும்பத்தார்கள். உறவினர்கள் போன்றவர்கள் ஒதுங்கியிருத்தல் போன்றவை இடம்பெறுகின்றன. இதனால் தனியன்கள் தனிமையை நாடுபவர்களாகவும் விலகல் நடத்தையாளர்களாகவும் இனங்காணப்படுகின்றனர்.

மனித வாழ்வில் [illegible]லில் உருவெடுக்கும் பண்புகள் கால ஓட்டத்தின் மாறுதல்களால் மாற்றமுறுவதும் சமூகப் பொதுப்பண்புக்கு ஒவ்வாமையாகக் காணப்படுவதும் இயற்கையான ஒன்று. தற்கால யாழ். சமூகக் கட்டமைப்பில் மனப்பாங்கு மற்றும் நடத்தை ரீதியான பல ஒவ்வாமைப் பண்புகள் பெருமளவில் ஏற்பட்டுள்ளதை இனம் காண முடிகின்றது. அறிவியல் வளர்ச்சி, பண்பாட்டு முதிர்ச்சி, மனித இன முன்னேற்றத்திற்கு வலுவான சமுதாயக் கட்டமைப்பு தேவை. யுத்த காலத்தில் மறுக்கப்பட்டிருந்த பல விடயங்களை இன்று யாழ். சமூகம் திறந்து விடப்பட்டிருக்கின்றது. (அடுத்த வாரம் தொடரும்)

**யோ. சங்கீத்தா**
மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

74

# கலிங்கத்து மாகன்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா



### நிசங்கமல்லன்

கலிங்கார வம்சத்தைச் சேர்ந்த பராக்கிரமன் என்ற சேனைத் தலைவன் மகாபராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதியை மீண்டும் அரச



நிசங்கமல்லன் அமைத்த சத்மஹல்பிரசாதய

கட்டிலேற்றினான்.(கி.பி.1209-கி.பி 1212) இந்த அரசியின் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் பொழுது ஏழாவது மாதம் பராக்கிரமபாண்டியன் தென்னிந்தியாவிலிருந்து பெரும் படையுடன் வந்து, லீலாவதியையும் தளபதியையும் கொன்று இலங்கையைக் கைப்பற்றிக் கொண்டான். (கி.பி.1211-கி.பி1212) அவனது மனுநீதி தவறிய ஆட்சி மூன்றாண்டுகள் புலத்திநகரில் நிலவியது.

1197 தொட்டு 1215 வரையிலான காலகட்டம் இலங்கை வரலாற்றில் குழப்பமானதாக விளங்கியது. அரசியல் விவகாரங்களில் சேனாதிபதிகள் கூடுதலாகத் தலையிட்டமையே பிரதான காரணமாகும். கீர்த்தி, ஆசாயமனதன் ஆகிய சேனாதிபதிகள் தாம் விரும்பிய எண்ணப்படி லீலாவதி, கல்யாணவதி ஆகிய பெண்களை ஆட்சியாளராக்கினர். லீலாவதியை மூன்று தடவைகள் சிம்மாசனத்தில் சேனாதிபதியே அமர்த்தினான். கலிங்கவம்சாவழி வந்தவர்களும் பாண்டிய வம்சாவழி வந்தவர்களும் அரசுரிமைக்காக பிணக்குப்பட்டனர். இலங்கை மன்னர்களுக்கும் கலிங்க, பாண்டிய அரசிகளுக்கும் பிறந்த பிள்ளைகள், அவர்கள் வழிவந்த பேரப்பிள்ளைகள் என்போர் அரச உரிமைகோரினர். கலிங்கமாகன் என்பவன் இலங்கையைக் கைப்பற்றும்வரை இக்குழப்பநிலை நிலவியது.

### கலிங்க மாகன்

இந்நிலையில் இலங்கை மக்கள் செய்த பாவங்களின் விளைவாக கலிங்க தேசத்தைச் சேர்ந்த குரூர மனம் கொண்ட இளவரசன் மாகன் என்பவன் இருபதினாயிரம் கலிங்க வீரர்களுடன் இலங்கையில் இறங்கி, தன்வசப்படுத்திக் கொண்டான். என்கிறது சூளவம்சம். அவன் தவறான சமய நெறிகளைக்கொண்டு ஒழுகுகின்ற நீதி நியாயமற்றதுட்டன், அடர்காட்டிடையே அழிவைச் செய்ய எழுந்த காட்டுத்தீ உண்மையென்ற அல்லி மலர்களைக் கூம்ப வைக்கும் சூரியன், பகற்பொழுதில் மலரும் தாமரைகளை வாடவைக்கும் சந்திரன், காட்டுத்தீ பரவியதுபோல இலங்கையை அவர்கள் ஆக்கிரமித்தனர். நாங்கள் கேரளத்தின் பூதங்கள். எனக்கோஷமிட்டபடி இலங்கை வாழ் மக்களின் உடைகள், ஆபரணங்கள், திரவியங்கள் என்பனவற்றைக் கொள்ளையிட்டனர். கிராமங்கள் தோறும் வன் செயல்கள் புரிந்தனர். வீடுகளுள் புகுந்து கைகளையும் பாதங்களையும் வெட்டிக்கொள்ளையிட்டனர். சிங்கள மக்களுக்குச் சொந்தமான மாடுகளையும் எருமைகளையும் அபகரித்துச் சென்றனர். செல்வந்தர்களை ஒட்டாண்டியாக்கினர். புத்தசிலா மனைகளையும் சேத்தியங்களையும் தரைமட்டமாக்கினர். கைப்பற்றிய வீடுகளையும் விகாரை மனைகளையும் தமக்கு விரும்பிய தமிழர்களுக்கு அளித்தனர். சிறுவர்களைச் சாட்டைகளால் அடித்தனர். மக்கள்களைக் கொண்டு கடுமையாக வேலைகளைச் செய்வித்தனர். பெறுமதி வாய்ந்த நூல்களை கொளுத்தி அழித்தனர். முன்னைய மன்னர்களர் மிகவும் பெறுமதி மிக்கதாக மதிக்கப்பட்டு பேணப்பட்ட இரத்திரவலி சேத்தியத்தை முற்றாக அழித்தனர். அந்தோ! அந்தோ! யமனின் கிங்கரர்கள் மாதிரி செயற்பட்ட தமிழ்ப் பூதங்கள் இந்த இராச்சியத்தையும் சமயத்தையும் அழித்தன. அதன்பின்னர் புலத்தி நகரினைச் சுற்றிவளைத்துப் பராக்கிரம பாண்டியனைக் கைதுசெய்து விழிகளைத் தோண்டியபின்னர் அவனது திரவியங்களை எல்லாம் கவர்ந்து கொண்டான். விலைமதிப்பற்ற முத்துக்களும் வைரங்களும் கொள்ளையிடப்பட்டன எனக் கலிங்கத்து மாகனின் படையெடுப்பினைச் சூளவம்சம் விபரிக்கின்றது.




நிசங்கமல்லனால் கட்டப்பட்ட அமைச்சரவை (தூண்கள் மற்றும் சிங்கத்தின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது)

இலங்கையை ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களில் கலிங்கத்து மாகன் குறிப்பிடத்தக்கவன், சிங்கள, பாளி நூல்கள் அவனைப்பற்றி உண்மையான தகவல்களைத் தராது அவனது ஆரம்பகாலப் படையெடுப்பையும் அதன் கொடூரங்களையும் மிகைப்படுத்தி விபரித்துள்ளன. இன்றைய தமிழ்நாட்டின் வட பகுதியும் இன்றைய ஆந்திரப்பிரதேசத்தின் தென்பகுதியும் அன்றைய கலிங்கமாகவிருந்தன. இவ்வாட்சிப் பரப்பினைச் சேர்ந்தவர்கள் கலிங்கர் எனப்பட்டனர். மொழி ரீதியாக அவர்கள் தமிழ்களாகவும் சமய ரீதியாக அவர்கள் வீரசைவர்களாகவும் விளங்கியுள்ளனர். வரலாற்றுக் காலத்திலிருந்தே கலிங்கத்தவருக்கும் இலங்கையருக்குமிடையில் நெருங்கிய உறவுகள் இருந்துள்ளன. மகிந்தன் தனது ராணியாகக் கலிங்க இளவரசியான சம்காவை மணந்திருந்தான். விஜயபாகு கலிங்க இளவரசியான திரிலோக சுந்தரியை திருமணம் செய்திருந்தான். அதேபோன்று விக்கிரமபாகு, நிசங்கமல்லன் சாகசமல்லன் முதலான மன்னர்கள் கலிங்கத் தொடர்பு கொண்ட மன்னர்களாக இருந்தார்கள். இலங்கை அரசாட்சியில் கலிங்க உறவு பலமானதாக இருந்துள்ளது. எனினும் இக்கலிங்க இணைப்புடைய மக்கள் சிங்களவர்களாலும் சோழராலும் காலத்துக்கு காலம் துன்புறுத்தப்பட்டு அவதிப்பட்டனர். அவர்களின் உரிமைகளை வலியுறுத்தவும் பாதுகாக்கவும் கலிங்கத்திலிருந்து மாகனின் படையெடுப்பு நிகழ்ந்ததாக வரலாற்றாசிரியர்கள் விளக்கந்தருவர்.

கி.பி. 1215 ஆம் ஆண்டு கலிங்கத்திலிருந்து இலங்கை மீது கலிங்கத்து மாகன் பெரும் படையெடுப்பு ஒன்றினை மேற்கொண்டான். இவனை இலங்கை வரலாற்று ஆவணங்கள் கலிங்க விஜயபாகு எனவும் குறிப்பிடும் இப்படையில் போர்த் திறன் கொண்ட தளபதிகளாக மானவர்மன், கஜபாகு முதலானோர் அடங்கியிருந்தனர். அவன் முதலில் தன்படை வீரர்களுடன் யாழ்ப்பாணத்தில் இறங்கிப் பாசறை அமைத்துத் தங்கிய பின்னர் தென்னிலங்கை மீது படையெடுத்தான். மாகனின் படையெடுப்பினை அட்டூழியங்கள் நிறைந்ததாகவும், அவனைக் கொடூரமானவனாகவும் பௌத்த வரலாற்று ஆவணங்கள் சித்தரித்துள்ளன. சூளவம்சம், ராஜவலிய, நிஹாயசங்கிரகய, பூஜாவலிய முதலான நூல்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தந்திருக்கின்றன.

கலிங்கத்து மாகனின் ஆட்சிக் காலத்தைச் சூளவம்சம் 21 வருடங்கள் (கி.பி1215-1236) எனக் குறிப்பிடுகின்றது. பூஜாவலிய 40 வருடங்கள் (கி.பி.1215-1255) என்கிறது. வரலாற்றாய்வாளர் லியனகே 44 வருடங்கள் (கி.பி1215-1256) என்கிறார். உண்மையில் லியனகேயின் முடிவின்படி 44 ஆண்டுகள் என்பதே ஏற்றதாகும். கலிங்கத்து மகானின் ஆட்சி 1215 இலிருந்து 1256 வரை நடந்துள்ளது. மகானின் நீண்டகால ஆட்சியில் அவனாற்றிய பணிகள் பேசப்படாதுவிடப்பட்டுள்ளன. தமிழ் மன்னர்களுக்கு ஏற்பட்ட இலக்கியப் புறக்கணிப்பாக இது அமைந்தது. கலிங்கத்து மாகனின் படையெடுப்பால் உலர்வலயத்திலுள்ள நீர்ப்பாசனக் குளங்கள் சிதைந்தன. பௌத்த பிக்குகள் துன்புறுத்தப்பட்டனர். பௌத்த கட்டமைப்புகள் உடைந்து அழிவுற்றன. வரண்ட வலயத்திலிருந்து சிங்கள மக்கள் தென்புலம் நோக்கிப் புலம் பெயர்ந்தனர். தலைநகரும் பொலநறுவையிலிருந்து தம்பதேனியாவுக்கு மாறியது. ஆங்காங்கு சிங்களச் சிற்றரசுகள் பாதுகாப்பான இடங்களில் அமையலாயின. சைவ மக்களின் ஆதிக்கம் இலங்கை ஆட்சியில் அதிகரித்தது. முன்னர் தமிழ் மக்களிடமிருந்து சிங்கள மன்னர்களால் அபகரித்து சிங்கள மக்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள், வதிவிடங்கள், கால்நடைச் சொத்துக்கள் என்பன மீளப்பெறப்பட்டு



நிசங்கமல்லன் அமைத்த கல்சாசனம்

தமிழருக்கு அளிக்கப்பட்டன. சைவக் கோயில் திருப்பணிகள் நடைபெற்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்திரனியல் வாக்களிப்பு முறைமை அறிமுகமாகும்

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறைமைகளின் மாற்றங்களுடன் இலங்கையில் இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொரட்டுவ பல்கலைக்கழகம் வாக்களிப்பு இயந்திரம் ஒன்றை தயாரித்துள்ளது. தேர்தல் திணைக்கள அதிகாரிகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இயந்திரம் ஒன்றை ஆராய்ந்தனர்.

வினைத்திறன், நம்பகத்தன்மை என்பவற்றை அதிகரிக்கும் வகையில் இலத்திரனியல் வாக்களிப்பு அமைய வேண்டும். இலத்திரனியல் வாக்களிப்பை அறிமுகம் செய்ய சட்ட திருத்தங்களும் தேவைப்படும்.

ஆணையாளர் பயன்படுத்த பொருத்தமான இயந்திரத்தை சிபாரிசு செய்ய வேண்டும். வாக்களிப்பு இயந்திரத்தை பயன்படுத்தும் முறை பற்றி வாக்காளர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்.

இந்தியாவில் உள்ளது போன்ற இலத்திரனியல் வாக்களிப்பு முறைக்கு மாற வேண்டுமென எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் பேசும் போது கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சந்தேகநபரின் அரசியல் பலத்தின்படியே நாட்டின் சட்டம் செயற்படுகிறது

## பாரத லக்ஸ்மன் கொலை வழக்கில் சட்டத்தரணி தெரிவிப்பு

முன்னாள் அமைச்சரும் தொழிற்சங்கம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை தொடர்பான விசாரணையில் குற்றப் புலனாய்வு பொலிஸார் இரட்டை நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றாரென இந்த வழக்கின் சந்தேகநபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜகத் அபேநாயக்க நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இவ்வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வழக்கில் பாரதலக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மெய்ப்பாதுகாவலரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியே நீதிமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனது கட்சிக்காரருக்கு ஏற்பட்ட காயம் இன்னொரு நபருக்கு ஏற்பட்டது. அவரும் இவ்வழக்கின் சந்தேக நபராக குறிப்பிடப்பட்டுள்ளார். எனினும் அந்த சந்தேகநபர் சிங்கப்பூரிலுள்ள 5 நட்சத்திர ஹோட்டல் போன்ற வைத்தியசாலையில் வசதியாக சிகிச்சை பெற்று வருகின்றார்.

தனது கட்சிக்காரரை வைத்தியசாலையில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். ஆனால், மற்றைய சந்தேக நபருக்கு இவ்வாறு நடக்கவில்லை. இந்நாட்டில் சட்டம் செயற்படும் விதம் இப்படித்தான் உள்ளது. சந்தேக நபரின் அசியல் பலம், செல்வாக்கு. சமூக அந்தஸ்து ஆகியவற்றுக்கேற்ப அவர்கள் நடத்தப்படுகின்றனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கேமந்த வர்ணகுலசூரிய துமிந்த சில்வா இவ்வழக்கின் சந்தேக நபராக குறிப்பிடுவதற்கு முன்னரே சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

துமிந்த சில்வா நீதிமன்றத்துக்கு கூடிய விரைவில் வருவாரென அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இருதரப்பு வாத, விவாதங்களையும் அவதானித்த மேலதிக நீதவான் கண்வைத்திய நிபுணரின் கட்டளையை ஏன் கடைப்பிடிக்கவில்லையென காரணம் காட்டும் அறிக்கையை சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டுமென பணித்து சந்தேக நபர்களை ஒக்டோபர் 30 வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-2)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு மீண்டும் தலைமைத்துவ பயிற்சி

## நவம்பர் 15 இல் ஆரம்பம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இம்முறையும் தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்களுக்கான முதற்கட்ட தலைமைத்துவ பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மூன்று கட்டங்களாக மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. முதற்கட்டத்தில் ஒன்பதாயிரம் மாணவ, மாணவியருக்கு தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

கடற்படை மற்றும் பொலிஸ் முகாம்களில் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் நாட்களில் எழக்கூடிய சட்டப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நோக்கில் மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இம்முறை அதிகளவான மாணவ, மாணவியர் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படுவதனால் மூன்று கட்டமாக தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவுள்ளது. (அ-2)




கு.சின்னப்பபாரதி இலக்கிய அறக்கட்டளையின் சிறந்த சிற்றிதழுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் இந்தியாவில் அமைந்துள்ள நாமக்கல் என்னுமிடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கி.வீரமணியினால் ஜீவரதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.பரணீதரனுக்கு விருது வழங்கப்படுவதையும் அருகில் சின்னப்பபாரதி நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சரத் மீதான படுகொலை தீர்ப்பு 23 ஆம் திகதி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை படுகொலை செய்ய முயற்சித்தமை தொடர்பான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவை படுகொலை செய்ய முயற்சித்த பெண் தற்கொலை குண்டுதாரிக்கு அடைக்கலம் வழங்கியதாக தமிழர் ஒருவருக்கு எதிராக கேகாலை உயர் நீதிமன்றில் வழக்குத் தொரடப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு எதிரான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்ற நீதவான் மேனகா விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைகளின் தீர்ப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதவான் அறிவித்துள்ளார். மஞ்சுளா என்ற பெண் தற்கொலை குண்டுதாரியை வவுனியாவிலிருந்து அழைத்து வந்து தங்க வைத்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அனைத்து குற்றச்சாட்டுக்களும் பொய்யானது எனவும் தம்மையும் தமது மனைவியையும் அச்சுறுத்தி பலவந்தமாக சில ஆவணங்களில் கையொப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார். (அ-2)

# கூட்டமைப்புக்கு வடமாகாண தேர்தலை நடத்துவதே திட்டம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நீதிமன்றத்தின் ஊடாக வடமாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த முயற்சிப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

திவிநெகும சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வடமாகாண சபையின் சார்பாக வடமாகாண ஆளுநரிடம் ஒப்புதல் பெறுவதை ஆட்சேபித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இதன்மூலம் வடமாகாண ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்ற அளவில் அங்கு மாகாண சபையை அமைக்க வேண்டிய அவசியம் ஒன்று ஏற்படும். எனவே, வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் ஒன்று அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலையை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இந்த வழக்கின்மூலம் எதிர்பார்க்கின்றது.

இதேவேளை, 13 ஆம் அரசியல் அமைப்பில் இருந்து காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கூடிய விரைவில் நீக்க வேண்டும் என்றும் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரசியல் அமைப்பில் இருந்து இந்த அதிகாரங்களை நீக்கும் பட்சத்தில் இந்த சட்டத்தை அமுலாக்க வேண்டிய அழுத்தங்கள் ஏற்படும். இந்நிலையில் அதனை சமாளிக்கக்கூடிய பலத்தை பெற முடியும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற முடியாத பட்சத்தில் மக்களிடம் கருத்துக் கணிப்பை மேற்கொண்டேனும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்குமாறு அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# சவுதியில் இலங்கையர் ஒருவரின் அட்டகாசம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் வாகன சாரதியாக பணியாற்றி வந்த இலங்கையர் ஒருவர் அவரது தொழில் தருநரை கொலை செய்து விட்டு தொழில் தருநரின் மனைவியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சவுதியின் தெற்கு பகுதியில் உள்ள கோபார் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தொழில் தருநரையும் அவரது மனைவியையும் காரில் ஏற்றிச் சென்ற குறித்த சாரதி கோபாரில் உள்ள ஆள் நடமாட்டம் இல்லாத பகுதி ஒன்றில் வைத்து தொழில் தருநரை கொலை செய்துள்ளார்.

அதன்பின்னர் அவரது மனைவியை வன்புணர்வுக்கு உட்படுத்திவிட்டு தானும் தற்கொலை செய்ய முயற்சித்த போது பொலிஸார் அவரை கைது செய்தனர். கைதான இலங்கையருக்கு 50 வயது என்றும் கொலை செய்யப்பட்டவருக்கு 70 வயது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் நிலையான இருப்புக்கு சர்வதேச பொறிமுறை அவசியம்

## நாடு கடந்த தமிழீழ அரசு கனடாவிடம் வலியுறுத்தல்

முள்ளிவாய்க்காலுக்கு பிந்திய இன்றைய இலங்கைத் தீவின் சூழலில் ஈழத் தமிழர்களின் நிலையான இருப்புக்கு சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென கனேடிய எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளிடம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் பிரதான எதிர்க்கட்சியான என்.டி.பி. கட்சியின் வெளிவிவகார விமர்சகர் போல்டிவோ மற்றும் கனேடியத் தமிழர் அமைப்புகளுடனான சந்திப்பொன்றினை நடத்தியிருந்தனர்.

இச்சந்திப்பில் பங்கெடுத்துக் கொண்ட பொழுதே நாடு கடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகள் மேற்குறித்த விடயத்தினை வலியுறுத்தியுள்ளனர்.

சிங்கள அரசினால் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் வடிவமாக நில அபகரிப்பு மற்றும் மொழி கலாசாரச் சிதைப்பு, பொருளாதார வளச் சுரண்டல்கள் உட்பட்ட இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விரிவாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள பொது நலவாய அமைப்பின் சர்வதேச மாநாட்டினை புறக்கணிப்பது குறித்து கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஏற்கனவே கருத்துக்களை வெளியிட்டுள்ள நிலையில் குறித்த மாநாட்டினை புறக்கணிப்பதற்கு கனேடிய அனைத்து கட்சிகளது ஒப்புதலையும் பெற செயலாற்றல், இலங்கை தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை நடைபெறுவதற்கான அழுத்தத்தினை பிரயோகித்தல் மற்றும் ஈழத் தமிழினத்தின் சமூக, அரசியல், பண்பாட்டு, பொருளாதார ஆகியவற்றின் நிலையான இருப்புக்கு சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை ஒன்றினை உருவாக்க உதவுதல் போன்ற விடயங்களுக்கு கனடாவின் கட்சியின் முழுமையான பங்களிப்பினை எதிர்பார்க்கின்றோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகளினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. இன அழிப்பைத் தடுப்பதற்கும் மனித குலத்திற்கெதிரான குற்றங்களைத் தடுப்பதற்குமான கனேடிய சர்வகட்சிக் குழுவினரை சந்திப்பதற்கான நேரத்தினை ஒதுக்கித் தருமாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகளால் முன் வைக்கப்பட்ட கோரிக்கை இச்சந்திப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)

# நடைமுறைப்படுத்தவிருந்த பாஸ்நடைமுறை நீக்கம்!

## அமைச்சர் டக்ளஸின் முயற்சியால்

நெடுந்தீவில் கடற்படையினரால் மீண்டும் அமுல்படுத்தப்படவிருந்த தொழில் அனுமதி நடை முறை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டினை அடுத்து உடனடியாக நீக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கடற்படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட கலந்துரையாடலின் பிரகாரம் தொழில் அனுமதி, பாஸ் அனுமதி பெற்றுக் கொண்டதன் பின்னரே கடற்றொழிலில் ஈடுபடவேண்டுமென பணிப்புரை விடுத்தனர்.

கடந்த காலங்களில் இவ்வாறான நடைமுறையால் தாம் எதிர்கொண்ட இடர்பாடுகள் தொடர்பாகவும் நீக்கப்பட்டிருந்த பாஸ்நடை முறையை கடற்படையினர் மீண்டும் நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் தாம் எதிர் நோக்க வேண்டிய பிரச்சினைகள் தொடர்பாகவும் நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கொழும்பிலுள்ள அமைச்சரின் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு தெரியப்படுத்தியதுடன் இவ்விடயம் தொடர்பில் தமக்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அவர்களது கோரிக்கையை கவனத்தில் கொண்ட அமைச்சர் இது விடயம் தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் கடற்படை அதிகாரிகளுடனும் மேற்கொண்ட கலந்துரையாடலின் பிரகாரம் அமுல்படுத்தப்படவிருந்த பாஸ் நடைமுறையை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டார். (அ-2)

# அரசாங்கத்தின் வரி விதிப்பு வறிய மக்களையே பாதிக்கும்

## ஐ.நா. அபிவிருத்தி ஸ்தாபனம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின்வரி விதிப்புக் கொள்கை வறிய மக்களை பாதிப்பதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஸ்தாபனம் சுட் டிக்காட்டியுள்ளது.

இலங்கை தொடர்பிலான அதன் வருடாந்த அறிக்யையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் முதலீடுகள் உள்ளிட்ட வெளிநாட்டு நிதி கையாள்கை தொடர்பிலான வரி விதிப்புக்களை பாரிய அளவில் குறைத்துக் கொண்டுள்ளது.

எனினும் நேரடி மற்றும் மறைமுக வரிவிதிப்புக்கள் பொதுமக்கள் மீது அதிக அளவில் காணப்படுகிறது. இதனால் விலைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

இந்த நிலையில் தற்போதைய அரசாங்கத்தின் வரிக்கொள்கை வறிய மக்களை பாதிக்கும் வகையில் இருப்பதாக அபிவிருத்தி ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில் கடந்த 1995 ஆம் ஆண்டின் பின்னர் மொத்த தேசிய உற்பத்தியில் வருமான வரியின் பங்களிப்பு கணிசமாக குறைவடைந்துள்ளது.

1995 இல் 15 சதவீதமாக காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் வருமான வரியின் பங்களிப்பு தற்போது 2012 ஆம் ஆண்டின் முதல் 6 மாத காலப்பகுதியில் 6.9 சதவீதமாக குறைவடைந்துள்ளது. இது மிகப்பெரிய வருமான இழப்பை காட்டுகிறது.

இந்த சுமை அனைத்து மறைமுக வரிகளின் ஊடாக வறிய மக்களையே சென்றடைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் வரி விதிப்பு மற்றும் முதலீட்டு கொள்கையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# போதனாசிரியர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் விவசாயப் போதனாசிரியர் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்காக விண்ணப்பித்தவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளின் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் 0212058010 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் ஆர். தியாகலிங்கம் கேட்டுள்ளார். (அ)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.10 18

★ 1356-சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற நிலநடுக்கம் அதன் பேசல் நகரை முற்றாக அழித்தது.

★ 1860-இரண்டாவது ஓப்பியம் போர் முடிவுக்கு வந்தது.

★ 1867-ரஷ்யாவிடம் இருந்து அலாஸ்கா மாநிலத்தை ஐக்கிய அமெரிக்கா 7.2 மில்லியன் அமெரிக்க டொலர் விலை கொடுத்து வாங்கியது. இந்நாள் அலாஸ்கா நாள் எனக் கொண்டாடப் படுகிறது.

★ 1898-ஐக்கிய அமெரிக்கா புவெர்ட்டோ ரிக்கோவைக் கைப்பற்றியது.

★ 1908-பெல்ஜியம் கொங்கோவைக் கைப்பற்றியது.

★ 1912-முதலாம் பால்க்கான் போர் ஆரம்பமாகியது.

★ 1922-பிபிசி வானொலி ஆரம்பிக்கப் பட்டது.

★ 1929-கனடாவில் பெண்களும் மனிதர்கள் என சட்டபூர்வமாக எழுதப்பட்டது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஹிட்லரிடமிருந்து ஜேர்மன் தேசிய இராணுவத்தை அமைப்பதற்கான கட்டளை பிறந்தது.

★ 1944-சோவியத் ஒன்றியம் செக் கோசிலவாக்கியாவை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது.

★ 1945-வெனிசுவேலாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து அதன் ஜனாதிபதி பதவியிழந்தார்.

★ 1851-இங்கிலாந்தில் பளிங்கு அரண்டனையில் அனைத்துலக வர்த்தகக் கண்காட்சி முடிவுற்றது.

★ 1954-டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் முதலாவது டிரான்சிஸ்டர் வானொலியை அறிமுகப்படுத்தியது.

★ 1967-சோவியத் விண்கலம் வெனேரா 4 வீனஸ் கோளை அடைந்தது. வேறொரு கோளின் வளிமண்டலத்தை அளந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1991-அசர்பைஜான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்து விலகியது.

★ 1991-நாகப்பட்டினம் மாவட்டம் அமைக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

★ 1910-வி.நவரத்தினம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் (இ.2006)

★ 1950-மார்டினா நவரதிலோவா, டென்னிஸ் வீராங்கனை

★ 1960-ஜான் குளோட் வான் டாம், நடிகர்


★ 1978-ஜோதிகா, இந்தியத் திரைப்பட நடிகை

**இறப்புக்கள்**

★ 1871-சார்ள்ஸ் பபேஜ், பிரித்தானிய கணிதவியலாளர் (பி.1791)

★ 1931-தோமஸ் அல்வா எடிசன், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் (பி.1847)

**சார்ள்ஸ் பபேஜ்**



சார்ள்ஸ் பபேஜ் அல்லது சார்ளஸ் பபேஜ் பிரித்தானிய கணிதவியலாளர். கண்டுபிடிப்பாளர். இன்றைய கணனிகள் பயன்படுத்தும் எந்திர கணக்கியல் இயந்திரங்களைக் கண்டுபிடித்தவர். 1991 இல் பிரித்தானிய விஞ்ஞானிகள் இவர் திட்டமிட்டபடி difference engine இனை வடிவமைத்தனர். அது சரியாக இயங்கியமை இவரது திறமையை நிரூபித்தது.

**சார்ள்ஸ் பபேஜின் கண்டுபிடிப்புக்கள்**

புகையிரதத்தின் தைனமோ மீற்றர், நியமத் தொடருந்துப் பாதை (railway track) அளவுக்கருவி, சீரான அஞ்சல் கட்டண முறை, கலங்கரை விளக்கு ஒளி, கீறிவிச் ரேகைக் குறியீடு, சூரிய ஒளி கொண்டு கண்களைச் சோதிக்கும் கருவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க வல்லரசின் வேண்டுகோளுங்கிணங்க பல நாடுகளில், மத்தியஸ்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் நாடுகளில் நோர்வே முதன்மை வகிக்கிறது. பிறநாடுகளின் பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் அச்சுறுத்தல் இல்லாததினாலும் பல மேற்கத்தைய நாடுகளின் சொல்லைக் கேட்பதினாலும் அபிவிருத்தி அடைந்துவரும் அல்லது அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கு நன்கொடைகளை வழங்கிவரும் நாடு என்பதினாலும் நோர்வேயை அனைவரும் விரும்புகிறார்கள்.

# தோற்றுப்போன மத்தியஸ்தத்துக்குப் பின்னரும்

இதனை நன்கே பாவித்து வருகின்ற சில உலக வல்லரசுகள் இந்த வகையில் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் நேரடி வேண்டுதலின் பேரில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச தலைமைக்கும் மத்திஸ்தம் செய்யும் பணி 2000- ஆம் ஆண்டளவில் நோர்வேயிடம் ஒப்படைக்கப்பட்டது.

நோர்வேயும் இதய சுக்தியுடன் இருதரப்புக்கும் இடையில் பேச்சுவார்தையில் ஈடுபட்டது. விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் முன்னராகவும் பின்னராகவும் அமெரிக்கா மற்றும் இந்தியா சென்று வந்ததுமாகவே நோர்வேயின் பணி அமையப்பெற்றது. அமெரிக்காவின் திட்டம் என்பது தனது உலகப் பூகோள அரசியல் மற்றும் மேற்கு ஆசிய இராணுவ கள நிலைமைகளுக்கு ஏற்றவாறே அமைந்திருந்தது. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பது அமெரிக்காவின் அதி உயர் பணியாக இருந்தது.

இலங்கையினாலோ அல்லது விடுதலைப் புலிகளினலோ அமெரிக்காவுக்கு எவ்விதத்திலும் தொந்தரவு இருந்தது இல்லை. இருப்பினும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரை ஒரு புறத்தில் செய்துகொண்டிருக்கையில் விடுதலைப்புலிகளினால்நடத்தப்பட்ட போரைப் பயங்கரவாதச் செயற்பாடு என்றே உலக நாடுகள் கூறிவந்தன.

இந்நிலையில் விடுதலைப் புலிகளைச் சமாதான வலைக்குள் வீழ்த்துவதன் மூலமாக இலங்கையில் அமைதியைப்பேணுவதே சிறந்தது என்று கருதியது அமெரிக்கா.

ராஜீவ் காந்தியின் மரணத்துக்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் குளறுபடியை எப்படியேனும் தடுக்க வேண்டும் என்கிற கோட்பாடு நியூடெல்லிக்கும் இருந்தது. குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் இடம்பெற்ற வேளையில் இந்தியாவின் தெற்குப் பகுதியில், குறிப்பாக இலங்கையில் தற்காலிக அமைதி வேண்டும் என்பதே இந்தியாவின் எண்ணமாக அப்போது இருந்தது.

இந்தியாவைச் சுற்றி மூன்று பக்கமும் எதிரியை வைத்திருக்க இந்தியா விரும்பவில்லை. ஏற்கனவே கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இந்தியாவுக்கு இருந்தே வந்துள்ளது. இதனை நிறுத்த இந்தியாவினால் முடியாது என்பது இீந்தியாவுக்கு நன்கே தெரியும். தெற்குப்புறத்தில் இடம்பெறும் சம்பவத்தை இராஜதந்திர ரீதியில் கையாளலாம் என்பது இந்தியாவின் கணிப்பு. இதற்குச் சரியான நாடு நோர்வே என்பதுதான் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் கருத்தாகும். இதனை நன்கே பாவித்தன இரு நாடுகளும்.

இப்பணிக்குப் பல மேற்கத்தைய நாடுகள் நேரடிப் பங்காளிகளாக இருந்தன. மிகவும் இக்கட்டான பணியினை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்றன ஸ்கண்டிநேவிய நாடுகள். இலங்கை, நோர்வேயின் மத்தியஸ்த்தைப் புறக்கணித்துப் போரை விடுதலைப்புலிகளின் மீது திணித்தது. மத்தியஸ்தம் நிறுத்தப்பட்டாலும் நோர்வேயின் இராஜதந்திரப் போர் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இலங்கை விடயத்தில் நோர்வே சமாதான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற வேளையில் நோர்வேக்கு எதிராகச் செயற்பட்டு வந்தது இலங்கை. கொழும்பில் அமைந்திருக்கும் நோர்வேயின் தூதரகம் முன்பாகப் பல போராட்டங்களை நடத்தின இலங்கை அமைப்புகள். நோர்வேயின் தூதரகத்தை மூடும்படி கூடக் கேட்டது. இவைகளுக்கு மத்தியில் பல இராஜதந்திரச் செய்றபாடுகள் மூலமாகத் தனது இருப்பைத் தக்கவைத்துக் கொண்டது நோர்வே. சிங்களவர்களுக்கு ஆதரவான பேச்சுவார்த்தைகளைக் கூறி அவர்களை சமாதானப்படுத்தும் வேலைகளைக் கூடச் செய்தது நோர்வே. இது போதாதென்று விடுதலைப்புலிகளின் மீதுகூடப் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களைக் கூறியது நோர்வே.

மக்களின் அழிவைத் தடுக்க உலக நாடுகள் பல பிரயத்தனங்களை எடுத்தன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இருப்பினும் இந்தியாவின் வேண்டுதலுக்கு ஏற்பவே அமெரிக்கா இறுதிப்போர் இடம்பெற்ற வேளையில் செயற்பட்டது. இரு நாடுகளும் அதீத திட்டத்துடன் செயற்பட்டன. நோர்வே வெறும் பகடைக் காயாகவே பாவிக்கப்பட்டது. நோர்வே அரச சார்பில் இடம்பெற்ற சமாதானத்தூதுவர்கள்கூட தமிழ் மக்களின் அவலங்களைப் பார்த்து மனங்கலங்கியிருந்தனர் என்பதை நேரடியாகவே கூறியிருந்தார்கள் நோர்வேயின் சமாதானத்தூதுவர்கள். இப்படிப்பட்ட நிலையில் இருந்த நோர்வேயின் தூதுவர்கள் தற்போது கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருப்பது வியப்பாக இருந்தாலும் இதுவும் ஒருவகையிலான இராஜதந்திர நகர்வு என்றே கூற வேண்டும்.



ஏற்கனவே மத்தியஸ்தம் தோல்வியில் முடிந்ததினால் சற்று விலகியிருந்த நோர்வே

# தொடரும் இராஜதந்திரப் போர்...

பின்னர் பல்வேறுபட்ட இராஜதந்திர வேலைகளைச் செய்துகொண்டே வந்துள்ளது. நியூயோர்க், பரிஸ், லண்டன், நியூடெல்லி எனப் பல்வேறு இடங்களுக்குச் சென்று கருத்துப் பரிமாறுதல்களைச் செய்துகொண்டே வந்த

**நன்றி: இணையம்**

னர் நோர்வேயின் முக்கிய அரசியல் பிரமுகர்கள். இலங்கை விடயத்தில் சர்வதேச ஈடுபாடு அதிகரித்துள்ளது என்பதையே இச்சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சமாதானத்தை ஆரம்பிக்கும் வேளையில் இருந்தநிலை இன்று இல்லை. குறிப்பாக தமிழீழத்துக்கு ஆதரவான நிலைப்பாடு தற்போது தமிழக மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

இந்திய நடுவண் அரசியல் இரண்டாவது முக்கிய இடத்தில் இருக்கும் கட்சியாக கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. சுயநிர்ணய உரிமையே ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்பது தி.மு.க.வின் கொள்கையாகத் தற்போது இருக்கிறது.

டெசோ என்கிற அமைப்பை உருவாக்கி இந்தியா பூராகவும் ஈழத்துக்கு ஆதரவான சக்திகளை ஒன்றிணைப்பதுடன் உலக நாடுகளின் ஆதரவையும் ஈழத்துக்கு சார்பாகப் பெறுவதே தமது நோக்கம் என்று கூறுகின்றனர் டெசோ அமைப்பின் முன்னணித் தலைவர்கள். இப்படியிருக்கும் சூழ்நிலையில் இந்திய மத்திய அரசின் பங்கு என்பது முன் எப்போதும் இல்லாதவகையில் இனிவரும் காலங்களில் இருக்கும். நிச்சயமாக இலங்கை விடயத்தில் நோர்வேயின் பங்களிப்பு எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

இருதரப்பினரையும் சமாதானப்படுத்தும் நோர்வே விடுதலைப்புலிகளுக்கும் இலங்கையின் அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக் காலத்தில் நோர்வேயின் முன்னாள் சுற்றாடல் மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கான அமைதித் தூதுவராகச் செயற்பட்டார். தமிழர்களுக்கு ஆதரவாக இவர் செயற்பட்டார் என்று தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்தது சிங்கள அமைப்புக்கள். சிங்களவரையும் பகைக்காமல் தமிழரையும் அரவணைக்கும் தந்திரத்தையே இவர் மேற்கொண்டார்.

ஈழத்தமிழர்களுக்கு சமவுரிமைகளை வழங்காவிட்டால் அங்கு மீண்டும் இனமோதல் வெடிக்கும் என்று சமீபத்தில் சொல்ஹெய்ம் எச்சரித்தார். நோர்வேயின் ஆஃப்டன் போஸ்டன் என்கிற முன்னணிப் பத்திரிகைக்குப் பேட்டியளிக்கையில் சொல்ஹெய்ம் கூறியதாவது, "இலங்கையில் 30 ஆண்டு கால ஆயுதப் போராட்டத்துக்கு தமிழர் பிரச்சினையே காரணமாக இருந்தது".

"விடுதலைப் புலிகளை இராணுவம் தோற்கடித்த பிறகும் அப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. தமிழர்களுக்கு சமவுரிமைகள் வழங்கப்பட வேண்டும். இதையும் அவர்கள் இன்னும் செய்யவில்லை. இந்த விவகாரங்கள் தீர்க்கப்படாவிட்டால் இலங்கையில் எதிர்காலத்தில் மீண்டும் இனமோதல் புதிய வடிவங்களில் வெடிக்கும்" என்றார் சொல்ஹெய்ம். இக்கூற்றுக்குச் சிங்களத் தரப்பில் இருந்து கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. சிங்களவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் சில தினங்களுக்கு முன்னர் பி.பி.சி.யின் தமிழோசை மற்றும் சிங்களச் சேவைகளுக்கு சொல்ஹெய்ம் பேட்டியளித்துள்ளார். அவர் கூறுகையில், "இலங்கையில் சமாதானம் ஏற்பட முன் முயற்சி எடுத்த கொடை நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பியா ஒன்றியம் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இணைந்து 2009- ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு யோசனையை முன்வைத்தன. ஐ.நா.வும் இதன் பின்னணியில் இருந்தது.

அன்றைய நிலைமையில் போரின் முடிவு இலங்கையின் அரசுக்கு இராணுவ ரீதியிலான வெற்றியாக அமையும் என்பது எல்லோருக்கும் தெரிந்த நிலையில் போரின் முடிவில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படும் பேரழிவைத் தடுக்கும் வகையில் போரை முறையாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்கிற யோசனையை நாங்கள் முன்வைத்தோம். அந்தத் திட்டத்தின் முழுமையான இறுதி வடிவம் விடுதலைப் புலிகளும் அரசும் ஒப்புக்கொண்ட பிறகு தான் முடிவு செய்யப்பட்டிருக்கும். ஆனால் அதற்கு அடிப்படையாக நாங்கள் தெரிவித்த நடைமுறை யோசனை என்னவென்றால் சர்வதேச அமைப்பு, உதாரணமாக அமெரிக்கா, இந்தியா அல்லது வேறு ஒரு நாடு இலங்கையின் வடக்குக்கிழக்குப் பகுதிக்கு ஒரு பெரிய கப்பலை அனுப்பிவைப்பது என்றும் அதில் ஐ.நா. அதிகாரிகளோ அல்லது மற்ற சர்வதேச அமைப்பைச் சேர்ந்தவர்களோ இருந்து போரின் இறுதியில் எஞ்சியிருந்த அனைத்து விடுதலைப்புலிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் கணக்கெடுத்துப் புகைப் படத்துடன் பதிவு செய்வது என்பதாகும்.

அவர்கள்அனைவரும்கொழும்புகொண்டு செல்லப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைத்த பிறகு விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகிய இருவர் தவிரந்த மற்ற அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும்" என்றும் தெரிவிக்கப்பட்டது.

"எங்களின் இந்த யோசனை மட்டும் ஏற்கப்பட்டிருந்தால் இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பேர் இன்று நம்மிடையே உயிருடன் இருந்திருப்பார்கள். ஏப்ரல் மாதம் இந்தத்திட்டத்தின் இறுதி வடிவத்தை முடிவு செய்வதற்கான விடுதலைப்புலிகள் அமைப்பின் சர்வதேசப் பேச்சாளர் குமரன் பத்மநாதன் ஒஸ்லோவுக்கு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கடைசி நிமிடத்தில் பிரபாகரன் அவரைத் தடுத்துவிட்டார். எங்களின் பாதுகாப்பு அதிகாரிகள் அவரைப் பத்திரமாக அழைத்துவருவதற்காக கோலாலம்பூருக்கே சென்றிருந்தனர். ஆனால், இந்தத் திட்டம் தங்களுக்கு ஏற்புடையதல்ல என்று எங்களுக்குச் செய்தி சொல்லப்பட்டது. எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்றார் சொல்ஹெய்ம்.

அவர் மேலும் கூறுகையில், "போரின் இறுதி முடிவு என்னவாக இருக்கப்போகிறது என்பதை அனைவரும் உணர்ந்த நிலையிலும் போரை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முடிக்காமல் கடைசிவரை போராட வேண்டும் என்று பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமை முடிவெடுத்தது மிகப் பெரிய வரலாற்றுத் தவறு என்றே நான் நினைக்கிறேன். அதே சமயம் இதைக்காரணமாகக் காட்டி இலங்கை அரசு நடத்திய குறிவைத்த தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது"

"மக்கள் செறிவாக வாழும் பகுதிகள் என்று தெரிந்தே, இலங்கை அரசு தாக்குதல்களை நடத்தியது என்பதற்கான பல சான்றுகள், அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அதிலும் குறிப்பாக துப்பாக்கிச் சூடுகள் நடத்தக்கூடாது, பாதுகாப்பு வலயம் என்று அரசே ஒரு பகுதியை அறிவிப்பதும் அந்தப் பகுதிக்கு மக்கள் வந்த பிறகு அங்கே குறிவைத்துத் தாக்குதல் நடத்துவதுமாக அரசு செயற்பட்டிருக்கிறது என்பதற்கான வலுவான சான்றுகள் கிடைத்திருக்கின்றன" என்றார் சொல்ஹெய்ம்.

மத்தியஸ்தம் தோற்றுப் போனாலும் நோர்வேயின் இராஜதந்திரப் போர் பல்வேறு பாதைகளில் விரிந்தே செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசிய முன்னணி மக்களுக்கு உதவியது

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சீனியாமோட்டை பகுதிக்கு கடந்த 15 ஆம் திகதி சென்று அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களை சேர்ந்த வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், காலணிகள் ஆகிய வற்றை வழங்கியுள்ளனர். அத்துடன் அங்க வீனமடைந்தவர்கள் உட்பட போரால் பாதிக் கப்பட்டவர்களில் ஒரு பகுதியினருக்கு நிதி உதவியும் வழங்கப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், உபதலைவர்களில் ஒருவரும் அகில இல ங்கை தமிழ் காங்கிரஸ் தலைவருமான இ.எ. ஆனந்தராஜா, தேசிய அமைப்பாளர் விஸ் வலிங்கம் மணிவண்ணன், இளைஞர் அணி த்தலைவர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி உதவிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (அ-2)

# உத்தேச நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது

## உயர்நீதிமன்றில் மனு

(கொழும்பு)

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்கான உத்தேச நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் அரசாங்க நிதி மீதான நாடாளுமன்ற அதிகாரங்களை தாரைவார்த்துக் கொடுப்பதற்கு இட்டுச் செல் லும் என்று உயர்நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய த்தின் நிறைவேற்று இயக்குநர் கலாநிதி பாக் கியசோதி சரவணமுத்துவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. உத்தேச நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் இம் மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளட க்கப்பட்டிருந்தது.

இந்த உத்தேச நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என்றும் இது சட்டமாக்கப்பட வேண்டுமானால் நாடா ளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப் பட்டு மக்களின் கருத்துக்கணிப்புக்கு விடப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் அறிவிக்க வேண்டுமெனக்கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

அரசியலமைப்பின் 148 ஆம் பிரிவின் பிரகாரம் பொது நிதியை கட்டுப்படுத்தும் அதி காரம் நாடாளுமன்றத்துக்கே இருக்கிறது. இந்நிலையில் உத்தேச நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தின் மூலம் நாடாளுமன்றத்தின் அதி காரங்கள் தாரைவார்க்கப்படுவதாகவும் அம்ம னுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# விபச்சார லீலையில் திளைக்கும் யாழ்.நகர்

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் இதயமாக கருதப்படும் யாழ்.பேருந்து நிலையத்தில் இரவுவேளை களில் மிக மோசமாக விபச்சார பெண்களுடன் விபச்சார லீலைகள் நடைபெற்று வருகிறது.

இதனை தடுக்க யாழ்.மாநகரசபையினை நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார குழுத் தலைவர் எஸ்.விஜயகாந் கோரிக்கை விடுத்து ள்ளார்.

யாழ்.பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு அனு ப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். அக்கடிதத்தில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்கள்வருமாறு,

யாழ்.மாவட்டத்தின் இதயமாக காணப் படுகின்ற யாழ்.பேருந்து நிலையத்தில் இரவு வேளைகளில் மிக மோசமாக விபச்சார பெண்களுடைய விபச்சார லீலைகள் நடை பெற்று வருகின்றன.

கடந்த ஒருசில கிழமையாக மிகவும் மோச மான நிலை காணப்படுகின்றது. இதனை இரவு வேளைகளில் நேரடியாக கண்ட அனு பவம் எனக்கு உண்டு. எனவே, அந்த விடய த்தில் தாங்கள் கவனம் செலுத்தி உடனடியாக பஸ் நிலையச் சூழலில் சுற்றி நடைபெறும் விபச்சார லீலைகளை நிறுத்தி தமிழ் சமு தாயத்தினுடைய கலாசாரப் பண்பாட்டு விழுமி யங்களை காப்பாற்றுவதற்கு தாங்கள் சிறந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என மாந கர மக்கள் சார்பாகவும் தங்களை கேட்டுக் கொள்கிறேன். பொலிஸாரின் சேவை எம் மக்களுக்கும் நாட்டுக்கும் தேவை என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அமீர்அலிக்கு விரைவில் பதவி

(கொழும்பு)

நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அமீர் அலிக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவமும் பிரதி அமைச்சர் பதவியும் மிக விரைவில் வழங்கப்படுவது உறுதி என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் அரசாங்கம் 19 ஆசனங்களை பெற்றிருந்தால் இன்று கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் பதவியை அலங்கரித்திருப்பது இன்று இருக்கும் முதலமைச்சர் அல்ல. கல்குடாத்தொகுதி பிரதிநிதி அமீர்அலிதான் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கிடமில்லை. (அ-2)

# தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்க இந்தியா களத்தில் குதிக்க வேண்டும்

## கொழும்பு மாநகரசபை உறுப்பினர் குகவரதன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் கிடைக்கப்போவதில்லை என்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வலி யுறுத்தலை இந்திய மத்திய அரசாங்கம் புரி ந்து கொண்டு ஆக்கபூர்வமான அரசியல் காய் நகர்த்தலை மேற்கொள்ள வேண்டு மென ஜனநாயக மக்கள் முன்னணியின் உதவி பொதுச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான எஸ்.குக வரதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழ் மக்களின் தொப்புள் கொடி உறவான தமிழக அரசியல் தலைமை களும் மக்களும் இதற்காக தமது உணர்வு பூர்வமான ஆதரவை வழங்க வேண்டும்.

அம்மக்களுக்காகவே உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை அமுல் செய்து அதி காரப் பரவலாக்கலை வழங்காது மக்களின் அரசியல் உரிமைகளை பறித்துள்ளது.

இந்தியாவிற்கு விஜயங்களை மேற் கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட உயர்மட்ட தலைவர்கள் தமிழ் மக்க ளுக்கு 13 அல்ல அதனையும் மீறிய அதிகா ரப்பரவலாக்கலை வழங்குவோம் என உறுதி யளித்துள்ளனர். இது வரவேற்கத்தக்கது.

ஆனால் இலங்கைக்கு வந்தவுடன் அதனை மறுக்கின்றனர். ஏனென்றால் அரசாங்கத் தின் பங்காளிக்கட்சிகளாக ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணியுடன் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கலை வழங்குவதில்லை. 13 ஆவது திருத்தம் இரத் துச் செய்யப்படும் என்று கௌரவ ஜனாதிபதி உடன்படிக்கை ஒன்றை 2005 ஆம் ஆண் டில் செய்து கொண்டுள்ளார்.

இது மீறப்பட்டால் அரசாங்கத்திற்குள் விரி சல் ஏற்படும். ஆனால், ஜனாதிபதி உண்மை யாக தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்க வேண் டும் என்றால் தனது நிறைவேற்று அதிகார த்தை பயன்படுத்தி வழங்க முடியும்.


தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வை வழங் கும் தனிப்பெரும் ஆளுமை ஜனாதிபதிக்கு மட்டுமே உரித்தானது. ஆனால், அவர் ஏனோ தயக்கம் காட்டுகின்றார்.

அரசாங்கம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகளை அரசா ங்கத்தினால் மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

ஆனால், பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற பொறியில் கூட்டமைப்பை சிக்க வைத்து தீர்வை வழங்காது காலத்தை கடத்தி இந்தி யாவையும் ஐ.நாவையும் ஏமாற்றுவதே இல ங்கை அரசாங்கத்தின் திட்டமாகும்.

இதனை இந்தியா புரிந்து கொள்ள வேண் டும். களத்தில் குதித்து தமிழ் மக்களை பாதுகா த்து உரிமைகளையும் அதிகாரப்பரவலாக் கலையும் வழங்க வேண்டியது இந்தியாவி னால் தட்டிக்கழிக்க முடியாத தொப்புள் கொடி உறவின் தார்மீக கடமையாகும் என்றார் அவர். (அ-2)





பளை பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே. தபேந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் சிறுமியின் நடன நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்ட முதியவர்கள் கௌரவிக்கப்பட்டு அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

253

## குரங்கு அரசனின் தியாகம்

முன்னொரு காலத்தில் அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அதன் உள்ளே மலைப் பகுதி இருந்தது. மனிதர்களால் எளிதில் அங்கு வர முடியாது.

அங்கே எண்ணற்ற குரங்குகள் வாழ்ந்து வந்தன. அவற்றிற்கு அரசனாகக் குரங்கு ஒன்று இருந்தது.

அங்கே பெரிய மாமரம் ஒன்று இருந்தது. அதில் சுவையான பழங்கள் ஏராளமாகப் பழுத்தன. அந்த மரத்தை ஒட்டி ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது.

நாள்தோறும் குரங்குகள் கூட்டமாக அங்கே வந்தன. மரத்திலுள்ள பழங்களை விரும்பியுண்டன.

இந்தப்பழம் மனிதர்களுக்குக் கிடைக்கக்கூடாது. அப்படிக்கிடைத்தால் அவர்கள் இங்கு வருவார்கள். நமக்குத் தீங்கு செய்வார்கள். அதைத் தடுக்க என்ன செய்வது என்று சிந்தித்தது குரங்கு அரசன்.

ஏனைய குரங்குகளிடம் அது கவனமாக இருந்தால் இந்தப் பழங்கள் நமக்கு எப்பொழுதும் கிடைக்கும். ஒரு பழமும் மனிதர்கள் கைக்குக் கிடைக்கக்கூடாது.

ஆறுதான் இங்கிருந்து பழங்களை எடுத்துச் செல்லும். ஆற்றைநோக்கி வளரும் கிளைகளை நன்கு கவனியுங்கள். அவற்றில் பூ, பிஞ்சு தோன்றினால் உடனே பறித்துவிடுங்கள் என்றது. அதன்படியே குரங்குகளும் கவனமாக இருந்தன.

ஆற்றங்கரையில் எறும்புப் புற்று ஒன்று பெரிதாக வளர்ந்தது. மரக்கிளை ஒன்று அந்தப்புற்றின் அருகே இருந்தது. அதில் காய் ஒன்று காய்த்துப் பெரிதானது. குரங்குகளின் கண்களில் அதுபடவில்லை.

அந்த மாம்பழம் ஆற்றில் விழுந்தது. ஆறு அந்தப் பழத்தை உருட்டிச்சென்றது.

வேட்டைக்கு வந்த அரசனின் கையில் அந்தப்பழம் கிடைத்தது. அதை உண்ட அவன் அதன் சுவையில் தன்னை மறந்தான்.

ஆ! என்ன இனிப்பு. இப்படிப்பட்ட சுவையான மாம்பழத்தை நான் சுவைத்ததேயில்லை. வீரர்களே! இந்த மரம் எங்கிருந்தாலும் கண்டுபிடிப்போம் என்றான்.

அரசனும் வீரர்களும் வேடர்களும் ஆற்றங்கரையில் நடந்



தார்கள். நீண்ட பயணத்திற்குப் பின்பு மாமரத்தைக் கண்டார்கள். அதில் ஏராளமான பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

களைப்படைந்த அரசன் வீரர்களே! எல்லோரும் இங்கே இளைப்பாறுவோம். பின்பு பழத்தைப் பறித்து உண்போம் என்றான்.

நடந்தது எதையும் அறியாத குரங்குகள் அங்கே கூட்டமாக வந்தன. மாமரத்தில் ஏறின. பழங்களை உண்ணத் தொடங்கின.

இதைப்பார்த்த அரசன் கோபம் கொண்டான். வீரர்களே! வேடர்களை எழுப்புங்கள்.

அவர்கள் இங்குவரட்டும். மரத்தில் உள்ள குரங்குகளை அம்பு எய்து கொல்லட்டும். இல்லையேல் குரங்குகள் ஒரு பழத்தையும் விட்டுவைக்காது என்று கட்டளையிட்டான்.

குரங்கு அரசன் இதைக் கேட்டுத் திகைத்தது.

குரங்குகள் கீழே இறங்கித் தப்பித்து ஓட வழியில்லை. அங்குள்ள வீரர்கள் கொன்று விடுவார்கள்.

ஆற்றின் மறுகரையில் உள்ள மரத்தில் தாவித்தான் தப்ப வேண்டும். எந்தக்குரங்காலும் அவ்வளவு தொலைவு தாவ முடியாது. என்ன செய்வது என்று சிந்தித்தது.

தன் கண்ணாலேயே இரண்டு மரத்திற்கும் உள்ள தொலைவை அளந்தது. அருகில் வளர்ந்திருந்த நீண்ட மூங்கில் ஒன்றை பிடுங்கியது.

அதன் ஒரு முனையை மாமரத்தின் கிளையில் கட்டியது. இன்னொரு முனையைத் தன் இடுப்பில் கட்டிக்கொண்டது.

மூங்கிலின் நீளம் போதாது. தானும் சேர்ந்தால்தான் இரண்டு மரங்களுக்கு இடையே பாலமாகமுடியும் என்று நினைத்தது.

வலிமையை எல்லாம் பயன்படுத்திய அது மறுகரைக்குத் தாவியது. அங்கிருந்த மரத்தைத் தன்கைகளால் எட்டிப் பிடித்தது. அப்படியே இருந்தது. குரங்குகளைப் பார்த்து அது தாமதிக்க நேரம் இல்லை. என்மீது நடந்து மறுகரையை அடையுங்கள்.

இல்லையேல் எல்லோரும் வேடர்களின் அம்புகளுக்கு இரையாவோம். விரைந்து செயற்படுங்கள் என்றது.

ஒவ்வொரு குரங்காக மூங்கிலில் நடந்தது. பின்பு குரங்கு அரசனின் மீது நடந்தது. மறுகரையில் இருந்த மரத்தில் தாவியது.

இப்படியே தொடர்ந்து குரங்குகள் நடந்தன. ஒவ்வொரு குரங்கு நடக்கும் போதும் வேதனையால் துடித்தது குரங்கு அரசன்.

குரங்குகளைக் காப்பாற்றும் வாய்ப்புக்கிடைத்ததே. சாவதைப்பற்றிக் கவலை யில்லை. எல்லாக் குரங்குக ளும் பிழைத்தால் போதும் என்று தன் வேதனையைப் பொறுத்துக் கொண்டது அது.

குரங்குகள் நடந்ததால் அதன் முதுகெலும்பு உடைந்தது. இருந்தும் அது மரத்தின் பிடியை விடவில்லை.

கடைசியாக மிகவும் பருத்த குரங்கு ஒன்று வந்தது. அதன் மீது ஏறி மெல்லக் கடந்தது. அதன் எடையைத் தாங்காத குரங்கு அரசன் அப்படியே மயக்கம் அடைந்தது.

கீழே இருந்த அரசன் மேலே நடந்ததையெல்லாம் பார்த்தான். அந்தக்குரங்கின் தியாகம் அவனுக்குப் புரிந்தது. எப்படியும் அதைக்காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தான்.

வீரர்களே! மரத்தில் ஏறுங்கள். அந்தக்குரங்கிற்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது. மெல்லத் தூக்கிக் கொண்டு கீழே இறங்குங்கள் என்று கட்டளையிட்டான்.

மயக்கமாகிக் கிடந்த குரங்கை வீரர்கள் கீழே கொண்டு வந்தார்கள்.

மருத்துவர் அதைச் சோதனை செய்தார். உடைந்த எலும்புகளுக்கு மருந்து வைத்துக் கட்டினார்.

பின்பு அவர்கள் குரங்கை அரண்மனைக்குத் தூக்கி வந்தார்கள். மருந்துகளால் அதன் உடல் நலம் தேறியது. பழைய நிலைக்கு வந்தது.

அந்தக்குரங்கிற்கு அதிக மதிப்பு தந்தான் அரசன். அதைத் தன் நண்பனாக அரண்மனையிலேயே வைத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரணியில் கலந்துகொள்ள அனுமதியளிக்க வேண்டும்

## கரு கடிதம்– ரணில் நிராகரிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிராக சரத் பொன்சேகா ஏற்பாடு செய்துள்ள பேரணியில் கலந்து கொள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் கடந்த 2010 ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையிலேயே இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தி இருந்தது.

தற்போதும் நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிராகவே தேசிய் பிக்கு முன்னணி இந்த பேரணியை நடத்துகிறது. இதில் சரத் பொன்சேகாவும் கலந்து கொள்கிறார். பொதுவான எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதாலேயே இந்த பேரணி நடத்தப்படுகிறது.

இந்த நிலையில் அதில் கலந்து கொள்ள வேண்டாம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதிகளுக்கு தடை விதித்திருப்பது தொடர்பில் தாம் அதிருப்தி அடைவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தடையை உடனடியாக நீக்கி கட்சி உறுப்பினர்கள் இந்த பேரணியில் பங்குபற்ற அனுமதிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இக் கோரிக்கையை கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் நிராகரித்துள்ளார். சரத் பொன்சேகாவின் பேரணியில் கலந்துகொள்ள உறுப்பினர்களுக்கு கட்சியின் செயற்குழு விதித்திருந்த தடை தொடர்ந்தும் அமுலில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை மீறி இந்த பேரணியில் கலந்து கொள்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்களின் கட்சி உறுப்புரிமையும் இல்லாது செய்யப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார். (அ-2)

# மாதகல் மேற்கு பிரதேசம் மீள்குடியமர்வுக்காக நாளை மறுதினம் கையளிக்கப்படவுள்ளது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் மேற்கு பிரதேசம் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்படுகின்றது என ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற மாதகல் மேற்கு பிரதேசத்தின் மீள்குடியேற்றம் தொடர்பாக அப் பிரதேச மக்கள் மற்றும் மக்கள் அமைப்பு பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாதகல் மேற்கு பிரதேசம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக நாளை மறுதினம் சனிக்கிழமை கையளிக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து அந்த பிரதேசத்தைச் சேர்ந்த 250 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்குறித்த திகதிக்குப் பின்னர் வருகின்ற ஒருசில நாட்களில் இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மக்கள் மீள்குடியேறும் போது அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்துவதற்கும் அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த மீள்குடியேற்றத்தின் போது அந்த பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் மீளக்குடியேறி வெற்றிகரமான மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவ்வாறு மக்கள் ஒத்துழைப்பு வழங்குகின்ற போதே மீள்குடியேற்றத்திற்கு பின்னராக அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுக்க முடியுமென அவர் கேட்டுள்ளார்.

அத்தோடு மீள்குடியேறும் மக்களுக்கு அரசின் விதிமுறைகளுக்கு அமைவாக வீட்டுத்திட்டங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி ஏற்கனவே மீள்குடியேறிய மாதகல் கிழக்கு மற்றும் மாரீசன்கூடல் கரையோர வாழ் மக்களுக்கும் வீட்டுத் திட்டங்கள் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்தப் பிரதேசங்களுக்கான ஏனைய உட்கட்டுமானம் மற்றும் வீதி, மின்சாரம் உள்ளிட்ட தேவைகள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு அந்த பிரதேசங்களுக்கு அதிகாரிகள் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டு தேவைகள் இனங்காணப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அவர் குறிப்பிட்டார். (அ-2)

# தமிழக அகதிகளுக்கு ஆவணங்கள் வழங்கல்

## நுங்கம்பார்க்கத்தில் விசேட சேவை

(கொழும்பு)

தமிழகத்தில் அகதிகளாக வசிக்கும் இலங்கையர்கள் தற்போது நாடு திரும்ப ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு நாடு திரும்பும் அகதிகளுக்கு ஆவணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அவர்களுக்கான கடவுச்சீட்டு, குடியுரிமை சான்று உள்ளிட்ட ஆவணங்களை வழங்கும் நடவடிக்கைகளை சென்னையில் உள்ள இலங்கையின் உதவி உயர்ஸ்தானிகரகம் மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பிலான விசேட சேவை ஒன்று நேற்றைய தினம் நுங்கம்பார்க்க த்தில் உள்ள சென்னை உதவி உயர்ஸ்தானிகரகத்தின் புதிய காரியாலயத்தில் நடத்தப்பட்டுள்ளது . (அ-2)

# தூவல் நீர்ப்பாசனத்திற்கு மின்சார செலவும் குறைவு

## விவசாயிகள் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேசத்தில் நீண்ட வரட்சி ஏற்பட்டதன் காரணமாக விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களுக்கான நீர்த்தேவை போதுமானதாக இன்மையால் தூவல் நீர்ப்பாசன முறையை பின்பற்றுவதாக தெரிவித்தனர்.

தூவல் நீர்ப்பாசன முறையின் மூலம் குறைந்தளவு நீரில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளதாகவும் விளைச்சலில் எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் தெரிவித்த அவர்கள் மின்சார கட்டணமும் சிக்கனமாக உள்ளதெனவும் தெரிவித்தனர். எனினும் தூவல் நீர்ப்பாசன முறைக்கு ஆரம்ப முதலீடு சற்று அதிகமாக காணப்படுவதனால் விவசாய திணைக்களம் கடனுதவிகளை வழங்கும் பட்சத்தில் மிகவும் சிறப்பாகவும் பெருமளவிலான விவசாய செய்கையை மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவித்தனர். (அ-9-266)

# 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

18 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு ஆரஸ்ஸாவ எனும் புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை இலங்கை சமூக பாதுகாப்பு சபை ஆரம்பிக்கவுள்ளது. இந்த ஓய்வூதியத்திட்டம் சர்வதேச பெண்கள், சிறுவர் தினமாக கடந்த 11 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பு சித்தி எய்திய இரண்டு மாணவர்கள் இந்த ஓய்வூதிய திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இந்த ஓய்வூதியத் திட்டம் தொடர்பிலான மேலதிக விபரங்களை 0112-369151, 0112-369321 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (அ-2)


# அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் 10/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், அளவெட்டி, மல்லாகம், ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி எனும் முகவரிக்கு 31.10.2012 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பதவி– காசாளர் 306/15 (நிரந்தரம்) ஆண்கள் மட்டும்
குறியீட்டு இலக்கம்– 306/15
சம்பளத்திட்டம்– (06/2006 இன்படி) 9450 –11 000
75X10 – 80X10

கல்வித் தகைமை–
அ)கூட்டுறவு பணியாளரின் 16 ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணிப்பாளர் (சாதாரணம்) பத்திரம்/ க.பொ. த. (சாதாரணதரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/ வர்த்தகம், எண்கணிதம்/தூய கணிதம், சிங்களம்/ தமிழ் பாசை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும் காசாளராக/ வியாபார நடவடிக்கைகளில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

வயது– 18–45 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு–
1. சங்கப்பணிப்பாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி, பிறப்பு அனுபவ சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்தல் வேண்டும்.
3. இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணத்தை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்,
அளவெட்டி.

(சி–1330)


# ஈசொவ்ற் மெற்றோ திறப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஈசொவ்ற் மெற்றோ பல்கலைக்கழகத்தின் திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நிர்வாக இயக்குநர் டாக்டர் தயன் ராஜபக்ஷ, கௌரவ விருந்தினராக ஈசொவ்ற் கணனி கற்கைகள் நிறுவன பொதுமுகாமையாளர் நிஷன் சேம்பகுற்றியராட்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# நவராத்திரி விழா

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலயத்தில் நவராத்திரி பூஜைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை விஜயதசமிப் பூஜைகள் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள இலுப்பையடி ஞானவைரவர் ஆலயத்திற்கு வன்னி வாழை வெட்டுதலுக்காக அம்பாள் எழுந்தருளவுள்ளார். (அ-9)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக சமூகவியலதுறை விரிவுரையாளர் இ.இராஜேஷ்கண்ணன் நிகழ்த்துவார். இதன்போது முகிழ் வெளியீடும் இடம்பெறும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உயரதிகாரிகளுக்கு இரட்டை குடியுரிமை எதற்கு?

## நோர்வே கேள்வி எழுப்புவதாக விக்கிலீக்ஸ் தகவல்

இலங்கை உயரதிகாரிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்கியமை தொடர்பில் அமெரிக்காவிடம் நோர்வே அரசாங்கம் கேள்வி எழுப்பியதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது..

நோர்வேக்கான அமெரிக்கத் தூதுவர் க்ளைண்ட் வில்லியம்ஸுடன் நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் நடத்திய சந்திப்பு தொடர்பான தகவல்களே விக்கிலீஸ் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நோர்வே வெளிவவகார அமைச்சு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களுக்கு குடியுரிமை மற்றும் கிரீன்கார்ட் அந் தஸ்து வழங்கப்பட்டுள்ளது.குறித்த அதிகாரிகள் மீது அழுத்தங்கள் பிரயோகித்து யுத்தத்தில் பாதிக்கப்படும் பொதுமக்களை பாதுகாக்க முடியுமா?என நோர்வே அதிகாரிகள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

தமிழீழ விடுதலை புலிகளிடமிருந்து கிளிநொச்சி மீட்கப்பட்டதனைத் தொடர்ந்து அரசாங்கம் படையினரின் பாதுகாப்பையே முதனிலையாகத் கொண்டது. பொதுமக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கவில்லை.

பொதுமக்கள் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தாத காரணத்தினாலேயே பொதுமக்கள் நிலைகள் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து ஒன்றிரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு மட்டுமே தெரியும்.

ஏனெனில் அநேகமான சட்டவிரோத உத்தரவுகள் வாய்மொழி மூலமாகவே விடுக்கப்படுகின்றன.

யுத்த குற்றச் செயல் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்க அதிகாரிகள் சாட்சியமளிக்கமாட்டார்கள் எனவும் தமிழ் மக்கள் அச்சம் காரணமாக சாட்சியமளிக்கமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகள் பின்பற்றப்படவில்லை என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர் என விக்கிலீக்ஸ் இணையம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

நோர்வேக்கான அமெரிக்க தூதரக பிரதி பொறுப்பாளர் செரீடெனியல்ஸ் திணைக்களத்திற்கு இந்த சந்திப்பு தொடர்பான தகவல்களை அனுப்பி வைத்துள்ளார். 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. (அ-2)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி உலோலை சிட்டி பிள்ளையார் தேவஸ்தான நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.45 தொடக்கம் முற்பகல் 11 மணியளவில் உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள் ளது.

27 ஆம் திகதி சனிக்கிழமை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதலும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)



யா/மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியர் தேவராணி சங்கரப்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் இரா.ஜெயக்குமார், ஆசிரியர்கள் ,ஓய்வு பெற்ற அதிபர்களான சி.கந்தசாமி, செ.சிவநடராசா மற்றும் பெற்றோர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# மாகாணசபை முறைமையை இரத்து செய்ய வேண்டும்

## குணவன்ச தேரர் தெரிவிப்பு

மாகாண சபை முறைமை இல்லாதொழிக்கப்பட்ட வேண்டுமென தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் அல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் தேசியக் கட்சியினால் இந்த மாகாண சபை முறைமை உருவாக் கப்பட்டது.

மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றோம். மாகாணசபை முறைமை இரத்து செய்யப்படாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும்.

மூன்றிலும் இரண்டு பெரும்பான்மை பலமுடைய அரசாங்கத்திற்கு இது சுலபமான காரியமாகும் என அல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் ஆதரவளிக்க வேண்டும் என அவர் மேலும் கோரியுள்ளார். (அ-2)

# கடன்பெறாத முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு அமைச்சர் கஜதீர சந்திப்பார்

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான கடன் திட்டத்திற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் கடன் திட்டதிற்கு தெரிவாகி சில தவிர்க்க முடியாத காரணத்தினால் கடனை வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாதவர்களின் பெயர்விபரங்களை முல்லை அரச அதிபர் யோ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இவர்களை புனர்வாழ்வு அமைச்சர் சந்திர சிறி கஜதீர எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளமையினால் தவறவிட்டவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

வி. கமல் (மன்னாங்கண்டல்), ஈ. தெய்வேந்திரன் (கெருடாமடு),ஈ.யோகேந்திரன் (வசந்தபுரம்),எஸ்.அரவிந்தன் (கெருடாமடு), ஏ.கனகேஸ்வரன்(உடையார்கட்டு வடக்கு),ஜி. பாஸ்கரன் (உடையார்கட்டு வடக்கு) ,ஏ.சிவனேஸ்வரன் (உடையார்கட்டு வடக்கு),எஸ்.டயனியஸ் விஜயசிங்கம் (இரணைப்பாலை), என். யோகாசினி (இரணைப்பாலை),ஆர்.சர்மிளா (மாணிக்கபுரம்), ஜி.ஒகஸ்றீன்தாஸ் (றெட்பானா), எஸ்.எட்மன் ( மாணிக்கபுரம்),எஸ். அழகரட்ணம் விஜயலட்சும் (மாணிக்கபுரம்), எஸ். கருவல் தயாளன் (மாணிக்கபுரம்), எஸ்.சத்தியபாமா (மாணிக்கபுரம்), டபிள்யூ. கணராசா (கைவேலி),எஸ்.சங்கர் (கோம்பாவில்), டபிள்யூ. குணசீலன் (கோம்பாவில்), எஸ்.பார்த்தீபன் (கோம்பாவில்),எஸ். பத்மநாதன் கபிலன் (கோம்பாவில்), பி. கபிலன் அனோசா (கோம்பாவில்), ஈ.ரவி (வள்ளிபுனம்),ஏ.பிறேம்குமார் (தேவிபுரம்), ஆர். செந்திநாதன் இனியவன் (இடைக்காடு), ஏ. அருள்ராஜ் (வள்ளிபுனம்), எஸ்.சிவனேஸ்வரி (இளங்கோபுரம்),என். சந்திரமோகன் (றெட்பானா), ஐ. ரகுவரன் (தேராவில்), எஸ். லோகேஸ்வரி (இளங்கோபுரம்),கே.மலர்விழி (இளங்கோபுரம்), பி.ஸ்ரீநிவாசம் (இளங்கோபுரம்), ஜி.ஜீவராஜா (தேவிபுரம்),எஸ்.விஜயகுமாரன் ( தேவிபுரம்), எஸ்.தர்மசீலன் (தேவிபுரம்), எஸ். முருகானந்தன் (தேவிபுரம்), சி.காளிமுத்து ('அ'தேவிபுரம்),ஈ.விஜயகுமார் ('அ'தேவிபுரம்), ஐ.சுதாகரன் ('அ'தேவிபுரம்),டி. தியாகராசா (தேவிபுரம்), எம்.அன்ரனி வின்சன் (தேவிபுரம்), எஸ். ஜெயகாந்தன் ('அ'தேவிபுரம்),ஆர் . ரவீந்திரன் ('அ'தேவிபுரம்),என்.பாலரஜனி ('அ' தேவிபுரம்),கே.கஜேந்திரன் ('அ'தேவிபுரம்), எஸ்.விஜயரூபன் (தேவிபுரம்)

ஜி.கதீஸ் ( சிலாவத்தை), ரி.நவதீபன் (முள்ளியவளை),எஸ்.பரணீதரன் (முள்ளியவளை), என்.டிலீசன் (அளம்பில்), எஸ். பிறேமானந்த் (செம்மலை), என்.நவநீதன் ( கள் ளப் பாடு தெற்கு),ஏ.அனிதா (கள்ளப்பாடு தெற்கு),வி.அரவிந்தன் (முள்ளியவளை), ஈ.சுஜிபவன் (முள்ளியவளை), வி.விஜயவர்ணன் (கள்ளப்பாடு வடக்கு),ஏ.மில்றோய் நிர்மல்ராஜ் (அளம்பில்),வி.வனஜன் (முள்ளியவளை),எஸ்.சுதாகரன் (குமுழமுனை), ரி.நிஷாந்தன் ( தண்ணீரூற்று), ஜே.யோகரஜீவன் (சிலாவத்தை),வி.நவரட்ணராசா தர்சினி (செம்மலை), எஸ்.சாரங்கன் (கள்ளப்பாடு தெற்கு), வை.பத்மகாந்த் (உண்ணாபுலவு), வி.கணசெல்வம் ( அளம்பில் வடக்கு), ஜே.பிரியா (முள்ளியவளை),ரி.சுதர்சன் (முள்ளியவளை), ரி.யோகேந்தன் (உண்ணாபுலவு),பி. ரதிகுமார் (முள்ளியவளை),சி.சுகுமார் ( குமுழமுனை), பி.பவனீதன் (குமுழமுனை), டபிள்யூ. பெனனீகன் (மணற்குடியிருப்பு), எஸ்.சுபாஸ்கரன் (செல்வபுரம்), டி.கமலேஸ்வரா (செம்மலை), ரி.லகுமதி (செம்மலை),கே.றெஜிகுரூஸ் (கள்ளப்பாடு),ஏ.அன்ரனி ஜோர்ஜ்( கள்ளப்பாடு தெற்கு),ரி.சிவசுதன் (முள்ளியவளை), கே. கிருஷ்ணகுமார் (பூதன்வயல்),ஏ.குகதாப் (வற்றாப்பளை), எஸ்.சதீஸ்வரன் ( முள்ளியவளை), எஸ்.சத்தியாகரன் (வற்றாப்பளை), ஜே.ஸ்ரான்லின் (உண்ணாபுலவு), யூ.சுகுணா ( உடுப்புக்குளம்), கே.ஆனந்த் (கள்ளப்பாடு வடக்கு), ஏ.லியோனிட் ( செல்வபுரம்), பி.பாஸ்கரலிங்கம் (செம்மலை), கே.புவனேந்திரன் ( உப்புமாவெளி),என்.கனகரத்தினம் அஜந்தன் (முள்ளியவளை),டி.ஜனிரன் (சிலாவத்தை), ஏ.தியாகலிங்கம் (சிலாவத்தை), ஏ.தேவானந்த் (உண்ணாபுலவு),எஸ்.டன்சன் (உண்ணாபுலவு),எம்.பசீலன் (குமுழமுனை),கே. கிரிணாகுமார் (அளம்பில்),பி.உலகேஸ்வரன் (வண்ணாங்குளம்),பி.மேரி வனிஸ்ரா (அளம்பில்), ஜே.அரவிந்தன் (அனிஞ்சியன்குளம்)

யு.கிருபாகரன் (உடையார்கட்டு), ஏ.சிவகுமார் (உடையார்கட்டு),ஈ.ரதீஸ்வரன் (உடையார்கட்டு),எஸ்.அருண் (நெடுங்கேணி), ஏ. மோகனசுந்தர் (ஒட்டுசுட்டான்), எஸ்.சிவமோகன் (மாங்குளம்),எஸ்.சந்திரகுமார் (மாங்குளம்), ஜே. பிரசாத் (கரிப்பட்டமுறிப்பு), பி.யோகேஸ்வரி (கரிப்பட்டமுறிப்பு),எஸ்.நிரோசா (கரிப்பட்டமுறிப்பு),பி.பிரியதர்சினி (மாங்குளம்), எஸ். சுபாசினி (மாங்குளம்), எஸ்.மதிவதனன் (ஒட்டுசுட்டான்),பி.அயூரதன் (மாங்குளம்), எஸ். ஸ்ரீலக்ஸ்மன் (ஒட்டுசுட்டான்),டி.நிலோசன் (ஒட்டுசுட்டான்),வி.தேவச்செல்வம் (ஒட்டுசுட்டான்),ஈ.தயாபரன் (ஒட்டு சுட்டான்),எ.சுதாகரன் (ஒட்டுசுட்டான்),டி.முத்துலிங்கம் (ஒட்டுசுட் டான்), எஸ்.குலசிங்கம் நவசுதா (ஒட்டுசுட்டான்), கே.சந்திரப்பிள்ளை (திரு முறிகண்டி), என். தர்சிகா (ஒட்டுசுட்டான்),வி. விக்னேஸ்வரன் (ஒட்டுசுட்டான்),ஜே.பிறேமதீபன் (மாங்குளம்), ஜே.அரியதீபன் (மாங்குளம்), என்.சுகிர்தா (ஒட்டுசுட்டான்),ஏ.டிக்சன் (செம்மலை), பி.சுதர்சன் (அளம்பில்),எஸ்.நயனன் (முள்ளியவளை) பி.துஷ்யந்த் (முள்ளியவளை), பி.தஸ்மிதா (முள்ளியவளை), கே.கிருஷ்ணன் (கள்ளப்பாடு தெற்கு), ஆர். வஜீபன் (முள்ளியவளை), ரி.அபர்ணா (முள் ளியவளை),எம்.குருபரன் (செம்மலை),கே. தேவேந்திரன் (வட்டுவாகல்), எம்.மதிவர்ணன் (கள்ளப்பாடு வடக்கு), பி.சுஜீவன் (முல்லைத்தீவு) ,ரி.அமலன் ( முள்ளியவளை),எஸ். அன்ரன் அருள்ராஜா (செல்வபுரம்), என். பிரபா (முள்ளியவளை), கே.முதுவான் (முள்ளியவளை),யு.பரத்குமார் (முள்ளியவளை மேற்கு), ஏ.டிவ்யா (முள்ளியவளை), எஸ். அரியசந்திரன் (முள்ளியவளை),எம். ஹரிஹரன் (அளம்பில்),ஈ.யுகந்தன் (முள்ளியவளை), எஸ்.கௌசிகன் (அளம்பில்), எச் . அமல்ராஜ் (சிலாவத்தை), என்.தணிகாசலம் (செம்மலை), ரி.சுதாகரன் (முள்ளியவளை), எம். நிமலராசா (குமுழமுனை), எஸ். சிவாஸ்கரன் (குமுழமுனை), யு. இலங்கேஸ்வரன் (உப்புமாவெளி), ஏ.ஜெயானந்தன் (குமுழமுனை), ஐ. பரமேஸ்வரன் (குமுழமுனை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.
-என்றில்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரியாலை கிழக்கு மக்களுக்கு உதவ முன்வாருங்கள்

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு-இடம்பெயர்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாக தங்கள் வாழ்விடங்களில் குடியிருக்க முடியாமல்போய் தற்போது மீளக் குடியமர்கின்ற இடங்களின் அடிப்படை வசதிகள் குறித்து, அரசும் பாராளுமன்ற பிரதிநிதிகளும் அதிகாரிகளும் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

இருபது ஆண்டுகளுக்கு மேல், தங்கள் மண்ணில் குடியிருக்கவில்லையெனில்-அந்தப் பிரதேசங்கள் மீள்குடியமர்வின் போது எத்தகைய கோலத்தில் இருக்கும் என்பதை ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

நகரையும் நகரில் வாழ்கின்ற மக்களையும் அடிப்படையாகக் கொண்டு அடிப்படை வசதிகளின் சுட்டெண்களை அளவிடாமல், எங்கள் மக்கள் மீள்குடியமர்கின்ற இடங்களில் இருக்கக் கூடிய அடிப்படை வசதிகள் குறித்த சுட்டெண்கள் தயாரிக்கப்படுமாக இருந்தால், போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் படும் அவலம் எத்தன்மையது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

இவ்வகையில் அரியாலை கிழக்கு, பூம்புகார், மணியந் தோட்டம் ஆகிய இடங்களில் சுமார் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் மீள் குடியமர்விற்கான அனுமதிகள் வழங்கப்பட்டு அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

எனினும் அப்பகுதி மக்களின் அடிப்படை வசதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமை மிகவும் வேதனைக்குரியது.

அரியாலை கிழக்கு மற்றும் பூம்புகார் ஆகிய இடங்களில் பாடசாலைகள் கட்டப்பட்டு அவை இயங்க ஆரம்பித்துள்ளனவாயினும் குறித்த இடங்களுக்குச் செல்வதற்கான வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இது தவிர குடிநீர், மின்சாரம், மருத்துவம், போக்குவரத்து ஆகிய வசதிகள் அடிப்படையைக் கூட இன்னமும் எட்டிப் பிடிக்கவில்லையென்ற உண்மை பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

வடக்கின் வசந்தம் என்பது அரியாலை கிழக்கு மக்களுக்குக் கிடைக்காமல் போனமைக்கான காரணம் புரியவில்லை.

எதுவாயினும் அரியாலை கிழக்கு மக்கள் ஆதரவற்றவர்களாக, அனாதைகளாக வாழ்வது போன்ற நிலைமையை உடனடியாக சீர் செய்ய வேண்டும்.

கூடவே பொலிஸ் மற்றும் பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகியவற்றின் உப அலுவலகங்களும் அங்கு உடனடியாக ஆரம்பிக்கப்படுவது அவசியம். இது விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர், தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் கூட்டாக இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழர் தரப்பின் ஒற்றுமைச் சின்னமாக அரியாலை கிழக்கை மாற்றுங்கள்.

# காங்கேசன்துறை துறைமுகம் 2014ஆம் ஆண்டு பாவனைக்கு

### இந்.துணைத்தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைமுகம் 2014-ம் ஆண்டு நடுப்பகுதியில் உபயோகத்திற்கு கொண்டு வருவதற்கான ஆயத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

6 கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தத் துறைமுக புனரமைப்பு பணியில் 3 கட்டங்கள் நிறைவடைந்துள்ளதாக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்திய வர்த்தகர்கள் யாழ்.மாவட்டத்தில் கைத்தொழில் சாலைகளை அமைப்பது தொடர்பாகவும் இந்தியாவிலிருந்து நேரடியாக குடாநாட்டிற்கு பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்.வணிகர் கழகத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கேசன் துறைமுக புனரமைப்புப் பணியானது இந்திய-இலங்கை நட்புறவின் வெளிப்பாடாக இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆறு கட்டமாக இந்தப்பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் முதல் மூன்று கட்ட பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

மூன்றாவது கட்டமாக முன்னெடுக்கப்பட்ட பணியானது கடலினுள் புதையுண்ட கப்பல்களை அகற்றுவது இது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

10 கப்பல்கள் மீட்கப்பட்டுள்ளன என்னைப் பொறுத்தவரை கடல் பயணத்துக்கு அதாவது கப்பல் பயணத்துக்கு தடையாகியிருந்த மூழ்கிய கப்பல்கள் அனைத்தும் கடலினுள்ளிருந்து அகற்றப்பட்டுவிட்டன.

இருந்தும் தற்போது கடலிலுள்ள ஆழத்தை விட 4 மீற்றர்கள் இன்னும் ஆழப்படுத்த வேண்டும். அப்போதுதான் பாரியளவு கப்பல்களை தடையின்றி காங்கேசன் துறைமுகத்திற்கு கொண்டு வர முடியும்.

காங்கேசன் துறைமுகத்தை 2014-ம் ஆண்டு நடுப்பகுதியில் உபயோகத்திற்கு கொண்டுவர முடியும் என்பதையும் என்னால் உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

### ஒன்றுக்கு ஆதரவு; மற்றதற்கு எதிர்ப்பு

# பொலிஸாரின் செயற்பாட்டை நேரில் கண்டனர் பொதுமக்கள்

யாழ்.நகரில் நேற்று இடம்பெற்ற இரு ஆர்ப்பாட்டங்களின் போதும் பொலிஸாரின் நடவடிக்கைகள் வேறுபட்டதாக காட்டப்பட்டதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்றைய தினம் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததோடு ஆர்ப்பாட்டக்காரர்களை வீதிக்கு இறங்காமல் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற வீதியினூடாக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டதோடு வாகன நெரிசலின் மத்தியிலேயே இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றது.

எனினும் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நடைபெற்ற அரசுக்கு ஆதரவான பேரணியின் போது கண்டி வீதியினால் வந்த வாகனங்கள் மாற்று வீதியினூடாக பயணிக்க அனுப்பப்பட்டதோடு, பெருமளவிலான வாகனங்கள் சுமார் 30 நிமிடம்வரையில் காத்திருந்ததனையும் அவதானிக்க முடிந்தது.

இவ்விரு ஆர்ப்பாட்டங்களின் போதும் பொலிஸாரின் நடவடிக்கை அவர்களின் செயற்பாட்டை பிரதிபலித்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அண்மையில் யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எளிக் பெரேராவுடனான ஊடகவியலாளர் சந்திப்பின் போது யார் ஆர்ப்பாட்டம் செய்தாலும் பொலிஸார் தமது நடவடிக்கையில் பாகுபாடு காட்டமாட்டார்கள் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

### சத்திய தரிசனம்



எந்தநாளில் நல்ல பக்தர்களெல்லாம் கூடி இறைவனது பெருமைகளைப் பாடுகிறார்களோ, எந்தநாளில் அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் வாழ்கின்றனரோ எந்தநாளில் இறைவனை நினைத்திருந்து அனைவருக்கும் உணவளிக்கின்றனரோ, எந்தநாளில் அனைவரும் சேர்ந்து இறைவனைப் பற்றியபோதனைகளையும் கேட்கிறோமோ, அந்த நாளே உண்மையான தினம். அன்றுதான் மனிதன் வாழ்கிறான் எனச் சொல்லமுடியும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பூஜைக்கு உரிய மலர்கள்

இறைவன் பூமியின் மீது படைத்துள்ள அத்தனை பொருட்களும் அவனுக்கு உரியன. அதில் மலர்களும் அடங்கும். ஆயினும் எல்லா மலர்களும் எல்லா நேரங்களிலும் எல்லா இடத்திலும் கிடைப்பது கடினம். ஆகையால் கிடைக்கும் மலர்களையும் அதன் தன்மையையும் பயனையும் உணர்ந்து மனநிறைவோடு, மனப்பூர்வமாகப் பயன்படுத்தி பூஜை செய்தால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்க திருப்தி உண்டாகும்.

செந்தாமரை- செல்வம், தொழிலில் மேன்மை, ஆத்மபலம், சூரியன் அருள்.

வெண்தாமரை- வெள்ளை நந்தியாவட்டை, மல்லிகை ,இருவாட்சி போன்ற வெள்ளை மலர்கள் மனக்குறையைப் போக்கும். மனதில் தைரியம் சேர்க்கும்.

தங்க அரளி மலர்கள் பெண்களுக்கு மாங்கல்ய பிராப்தி உண்டாக்கும். கடன் ஏற்படாது தடுக்கும். கிரகபீடை நீக்கும். குருபார்வை அருளும்.

சிவப்பு அரளி, செம்பருத்தி-மனதை வாட்டும் கவலை அகற்றி குடும்ப ஒற்றுமை பெருக்கும்.

நீலசங்கு புஷ்பம், நீலாம்பரம்,நீலோற்பகம் ஆகியவை அவப்பெயரைப் போக்கும். தரித்திரம் நீக்கும். மன அமைதி தரும். சனி பகவானின் அருளையும் பெற்றுத்தரும், ஆயுளைப்பெருக்கும்.

மனோரஞ்சிதம் குடும்ப ஒற்றுமையை வலுப்படுத்தி, கணவன்- மனைவிக்குள் அன்பையும் பெருக்கும்.


பாரிஜாதம்,அல்லிப்பூ போன்ற சற்று மங்கலான வெள்ளை புஷ்பங்கள் சந்திரன் அருளைப் பெற்று புத்தி வலிமையைப் பெருக்கும். தாயாரின் உடல் நலத்தையும் காப்பாற்றும், பாசிப்பச்சை, மரிக்கொழுந்து,மருவு போன்றவை அறிவைப் பெருக்கி மன உறுதியைத் தரும், புதனுடைய நற்பார்வை அருளும், அடுக்கு அரளி, செம்பருத்தி- ஞானம், கல்வி, தொழில் பெருகும். வில்வபுஷ்பம், கருந்துளசி புஷ்பம், மகிழமலர் ஆகியவை இராகு,கேது ஆகிய கிரகங்களின் நற்பலனைத் தரும்.

பழைய புஷ்பங்களையும்,மொட்டுக்களையும், தூய்மையில்லாத புஷ்பங்களையும் இறைவனுக்குச் சாத்தக்கூடாது. விநாயகப் பெருமானுக்கு எருக்கம்பூ, தும்பை, செம்பருத்தி, தாமரை, ரோஜா ஆகிய மலர்கள் பூஜைக்கு உகந்தவை.

முருகப்பெருமானுக்கு முல்லை, சாமந்தி, ரோஜா,காந்தள், செங்காந்தள் உகந்தவை.

திருமாலுக்கு தாமரை,பவளமல்லி,மரிக்கொழுந்து, துளசி,சாமந்தி, ஆகியவை உகந்தவை. நீலசங்கு புஷ்பம் பயன்படுத்தலாம். வரலட்சுமிக்கு மடலவிழ்ந்த தாழை மடல் மிகவும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாதனை வீரர்களுக்கு கௌரவிப்பு



அகில இலங்கை ரீதியில் தேசிய கல்வியியல் கல்லூரிக்கிடையில் இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டியில் வவுனியா தேசிய கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றதை அடுத்து கல்லூரியின் வீரர்களுக்கு வவுனியாவில் வரவேற்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது .

18 தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஊவா தேசிய கல்வியியல் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றியிருந்தன.இந்த நிலையில் 23 இடங்களில் வெற்றி பெற்ற வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி இரண்டாமிடத்தினைத் தனதாக்கிக் கொண்டது. 19 வருட கால வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி வரலாற்றி முதன்முறையாக இரண்டாமிடத்தினைப் பெற்ற நிலையில் வவுனியாவை வந்தடைந்த வீரர்களுக்கு வரவேற்பளிக்கப்பட் டது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த ஆண் வீரர் ஒருவர் சிறந்த மெய்வல்லுநர் வீரர் என்ற விருதினையும் பெண் வீராங்கனையொருவர் சம்பியன் பட்டத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கிண்ணியா மத்திய கல்லூரிக்கும் இடையிலான 17 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட கிரிக்கெட் போட்டியில் 2 விக்கெட் வித்தியாசத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. அணியின் வெற்றிக்கு ஹட்ரிக் உட்பட 8 விக்கெட்டுனை வீழ்த்திய சிந்துஜனை படத்தில் காணலாம்.

# தேசிய அணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச அணி தெரிவு

முல்லைத்தீவு மாவட்ட 21 வயதுக்குரிய தேசிய அணிக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் நவநீதன் தலைமையில் இப்போட்டி இடம்பெற்றது. இவ் இறுதிப் போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச அணியும் புதுக்குடியிருப்பு பிரதேச அணியும் மோதிக் கொண்டது. கடைசி நிமிடம் வரை இரு அணிகளும் கோல் போடாததனால் பனால்டி உதை வழங்கப்பட்டது. இதில் 3:2 என்ற கோல் கணக்கில் கரைதுறைப் பற்று பிரதேச அணி வெற்றி பெற்று தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விறுதிப் போட்டிக்கு பிரதம விருந்திராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரியும் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சங்க செயலாளர் சண்முகராஜாவும் வ்டமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் அண்ணாத்துரை கலந்து கொண்டனர்.

# பிரதேச செயலகத்துக்கு இடையிலான உதைபந்தாட்டம்



விளையாட்டு அமைச்சின் திட்டத்தின் கீழ் தேசிய கால் பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான 21 வயதிற்குட்பட்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாண செயலக அணியும் உடுவில் செயலக அணியும் தெரிவாகியுள்ளன.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெற்று வரும் இப்போட்டியில் முதலாவது போட்டி திங்கட் கிழமை நடைபெற்றது.


அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாபணப் பிரதேச செய லக அணியினை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணி மோதியது.

முதல் பாதி ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. இரண் டாவது பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி வீரர் நிதர்சன் முதலாவது கோலினை அணிக்காக அடித்தார். தொடர்ந்து இரு அணிகளுக்கும் கோல் பெறும் வாய்ப்பு இல்லாமல் போக யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி 1:0 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியும் கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. இரு அணிகளாலும் ஆட்டம் முடியும் வரை கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால் போட்டியின் முடிவு பனால்டி முடிவை நோக்கிச் சென்றது. பனால்டி உதையில் உடுவில் பிரதேச செயலக அணியானது 3:2 என்ற கோல் கணக்கில் வென்றது.

# தும்பளை நாவலர் அணி சம்பியன்





தும்பளை இளைஞர்களால் நடத்தப்பட்ட ஆறு அணிகள் கொண்ட லீக் முறையிலான 20:20 ஒவர்கள் கொண்ட கிரிகெட் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை வீனஸ் அணியை 2 விக்கெட்டுக்களால் தோற்கடித்து தும்பளை நாவலர் அணி சம்பியனாகியது.

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தும்பளை நாவலர் அணியை எதிர்த்து பருத்தித்துறை வீனஸ் அணி மோதியது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 20 ஒவர்கள் நிறைவில் 94 ஓட்டங்களை பெற்றது.


இதில் சக்தி 20 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சின் சார்பில் ஜோன்சன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தும்பளை நாவலர் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 19.5 ஓவர்களில் 100 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் கோகுலதர்மன் 22, ஜெபா 15 ஓட்டங்களைப் பெற்றனர். இத்தொடரில் தொடர்நாயகனாக வீனஸ் அணியின் சக்தி, ஆட்டநாயகனாக நாவலர் அணியின் யூகின், சிறந்த துடுப்பாட்ட வீரராக நியாஸ், சிறந்த பந்து வீச்சாளராக வினோதின், சிறந்த களத்தடுப்பாளராக நாவலர் அணியின் காண்டீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.(3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன் லீக் இருபது-20 கிரிக்கெட் போட்டி

# சென்னை சுப்பர் கிங்ஸை வீழ்த்தியது லயன்ஸ்



சம்பியன்ஸ்லீக் இருபது-20 தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி வெற்றிபெற்றுக் கொண்டது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும், ஹைவெல்ட் லயன்ஸ் அணிக்கும் இடையிலான இப்போட்டியில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நியூலன்ட்ஸில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற லயன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சிறந்த ஆரம்பமாக முதலாவது விக்கெட்டுக்காக 44 ஓட்டங்களை பகிர்ந்த அவ்வணி, அதன்பின்னர் மத்திய ஓவர்களில் மெதுவாக ஆடியது. ஆனால் இறுதி நேரத்தில் வேகமான ஓட்டங்கள் பெறப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக மகேந்திரசிங் தோனி 26 பந்துகளில் 34 ஓட்டங்களையும், சுப்பிரமணியம் பத்ரிநாத் 14 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், டூ பிளசீஸ் 20 பந்துகளில் 25 ஓட்டங்களையும், முரளி விஜய் 25 பந்துகளில் 22 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா 16 பந்துகளில் 21 ஓட்டங்களையும், சுரேஷ் ரெய்னா 16 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக ஆரோன் ஃபங்கிசோ 4 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சொஹைல் தன்வீர், டிர்க் நன்னீஸ், கிறிஸ் மொரிஸ், ஷன்டர் டி பிரையன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

159 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஹைவெல்ட் லயன்ஸ் அணி 19.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

2.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய அவ்வணி, அதன்பின்னர் 3-வது விக்கெட்டுக்காக 93 ஓட்டங்கள் பகிரப்பட வெற்றிபெறும் வாய்ப்பை பெற்றது. 4-வது விக்கெட் வீழ்த்தப்படும் போது 22 பந்துகளில் 44 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அவ்வணி பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக குலாம் போடி 46 பந்துகளில் 64 ஓட்டங்களையும், ஜியன் சைம்ஸ் 23 பந்துகளில் 39 ஓட்டங்களையும், நீல் மக்கன்சி 34 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக டக் பொலிஞ்சர் 4 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அல்பி மோர்க்கல், ரவிச்சந்திரன் அஷ்வின் இரு



வரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஹைவெல்ட் லயன்ஸ் அணியின் ஆரோன் ஃபங்கிசோ தெரிவானார்.

# ஆக்லாந்தை தோற்கடித்தது ரைற்றன்ஸ்

சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரின் நேற்றைய முதல்போட்டியில் ரைற்றன்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றது.

ஆக்லாந்து அணிக்கெதிரான இப்போட்டியில் ரைற்றன்ஸ் அணி 59 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கிங்ஸ்மீட், டேர்பனில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆக்லாந்து ஏசஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ரைற்றன்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 8.3 ஓவர்களில் 74 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அந்த சிறப்பான அடித்தளத்தினைச் சிறப்பாக பயன்படுத்தி ஓட்டங்களைக் குவித்தது. குறிப்பாக இறுதி 2 ஓவர்களில் 33 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் ரைற்றன்ஸ் அணி சார்பாக ஜக்ஸ் ருடோல்ப் 56 பந்துகளில் 63 ஓட்டங்களையும், பர்ஹான் பெஹர்டின் 23 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், ஹென்றி டேவிட்ஸ் 23 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆக்லாந்து ஏசஸ் அணி சார்பாக மைக்கல் பேட்ஸ், அஷார் மஹமூட், கைல் மில்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

173 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டுதுடுப்பெடுத்தாடிய ஆக்லாந்து ஏசஸ் அணி 18.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 59 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியின் நாயகனாக ரைற்றன்ஸ் அணியின் பர்ஹான் பெஹர்டின் தெரிவானார்.



# கே.பிக்கு எதிராக...

புலிகள் அமைப்பின் தலைவராக பத்மநாதன் அறிவிக்கப்பட்டார். ஆனால் 2009-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், அவர் மர்மமான முறையில் இலங்கைக்கு திரும்பினார்.

இலங்கையின் புலனாய்வு அமைப்பின் தலையீட்டின் பேரில், அவர் மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டதாகவும், சட்டவிரோதமான முறையில் அவர் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் அப்போது வெளிவந்த செய்திகள் தெரிவித்தன.

அப்போது இலங்கையின் அரச தொலைக்காட்சியில் அவர் ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகவும், சதி செய்ததாகவும், பயங்கரவாதத்திற்கு ஆதரவாக நிதி திரட்டியதாகவும் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கான ஆயுதக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளுக்கு அவர் தலைமை தாங்கிச்செயற்பட்டார்.

இதுநாள் வரையில் அவர் தடுப்புக் காவலில் இருப்பதாகவே அரச தரப்பில் கூறப்பட்டு வந்தது. அதேசமயம் அவர் இலங்கையின் வட பிராந்தியத்தில் செயற்படும் தொண்டு நிறுவனம் ஒன்றை நடத்தி வந்ததோடு, அதற்காக அவர் அடிக்கடி வடக்குப் பிரதேசங்களுக்கு பயணிக்க அனுமதிக்கப்பட்டும் வந்தார்.

தற்போது பத்மநாதன் எங்கிருக்கிறார் என்பது குறித்த அதிகாரப்பூர்வமான தகவல்கள் இல்லை. ஆனால் அவர் விடுதலைப் புலிகளின் தலைமையகமாகச் செயற்பட்ட கிளிநொச்சியில் இருப்பதாக சில நாட்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது இலங்கை அரசுக்கு வெற்றியென்கிறார் ஹுலுகல்ல. ஒரு காலத்தில் இலங்கை அரசுக்கு எதிராகவும், தமிழர்களுக்காகவும் இருந்தவர், இன்று இலங்கையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக உழைப்பதாகத் தெரிவித்த ஹுலுகல்ல, அதைச் செய்வதற்கு அவருக்கு உரிமை உண்டு என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் அதிகார மட்டத்தில் மிகவும் சிறிய பதவிகளை வகித்த பலர் இன்னமும் வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சூழலில், அந்த அமைப்பின் உயர்மட்டத்தலைவர் ஒருவர் சுதந்திரமாக நடமாட முடிந்தது எப்படி என்று கேட்கப்பட்டதற்கு பதிலளித்த இராணுவத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரியான பிரிகேடியர் ருவான் வணிகசூரிய, பத்மநாதன் மீது எந்தவிதமான சட்டரீதியான புகாரும் இல்லாததால், அவர் மீது வழக்குத் தொடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று தெரிவித்தார். (எ-11)

# தாமதமின்றி...

ஜனாதிபதியின் மனித உரிமை விவகாரங்களுக்கான சிறப்புத் தூதுவரும் அமைச்சருமான மகிந்த சமரசிங்கவுக்கும் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். இச்சந்திப்பு நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் பான் கீ மூன் கூடிய கவனம் செலுத்தியதாக மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்க்கி தெரிவித்துள்ளார்.

முழுமையான பொறுப்புக் கூறலுக்கான சட்டக் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான, நம்பகமான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் நீதி, சமத்துவம், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்த சுதந்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமன்றி காலநிலை மாற்றத்திற்கு எதிரான முயற்சிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இருவரும் விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது அமைச்சர் மகிந்த சமரசிங்கவுடன் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன்னவும், ஐ.நா.செயலாளர் நாயகத்துடன் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் நியூயோர்க்கிற்கான பிரதிநிதி ஐவன் சிமோனோவிக்கும் கலந்து கொண்டார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி நகரில்... Little Aid CHARITY NR 1129695

பிரித்தானியாவைத் தளமாக கொண்டு இயங்கும் "லிட்டில் ஏய்ட்" நிறுவனம் திருநகரில் நடாத்தும்

**இலவச கணனிப்பயிற்சி கல்லூரி**

- வயது வேறுபாடின்றி அனைவரும் பங்குபற்றலாம்

பிரிவு 01 - மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளின் கணனிக் கல்வியை மேம்படுத்தல்

பிரிவு 02 - இல்லத்தரசிகள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள், விதவைகளின் கணனிக் கல்வியை மேம்படுத்தல்

முற்றிலும் இலவச கணனி பயிற்சி நெறி / இலவச பாட புத்தகங்கள்

பிரித்தானியாவிலிருந்து பெறுமதி வாய்ந்த சான்றிதழ்கள்

மேற்படி கணனிப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் தங்கள் முழு விபரங்கள் அடங்கிய சுயவிபரக்கோவையை எதிர்வரும் 29.10.2012 க்கு முன்னர்

அனுப்ப வேண்டிய முகவரி..

"லிட்டில் ஏய்ட்"

323, பலாலி வீதி, (பரமேஸ்வராச்சந்தி),

யாழ்ப்பாணம்.

(C-1331)

மேலதிக விபரங்களுக்கு - 0755062806



**MOBILE PHONE**

**REPAIRING COURSE**



நீங்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா? வேலைசெய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா?

Free
Toolkit
The Guide to Success Book
1000 Secrets DVD CD

உங்கள் எதிர்காலத்திற்கு......
மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர தொழில் வாய்ப்பு
சர்வதேச தரத்திலான டிப்ளோமா சான்றிதல்

திருத்தும்துறையில் பத்து வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000 க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதல்தர ஆசியர்

**Ganesh.K**

கட்டணம் 9500/=

- பாடநெறிக்கு செலுத்திய கட்டனத்தை முதல் மாதத்திலே சம்பாதித்துகொள்ள முடியுமா முதலீடு
- நவீனமான *MOBILE* போன் *REPAIR* பன்னும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
- மிககுறைந்த செலவில் மிக சிறிய இடத்தில் மிக குன்றந்த முதலீட்டில் ஆரம்பிக்கக்கூடிய ஒரு சிறந்த சுயதொழில்

(சி-1326)

4 Days Course — 5 வது நாளில் தொழிலை ஆரம்பிக்க உங்களுக்கு 100% நாங்கள் உத்தரவாதம் வழங்குவோம்.

பதிவுகளுக்கு விரையுங்கள்

| 27வது பிரிவு வவுனியாவில் ஆரம்பம் | 14வது பிரிவு யாழ்பாணத்தில்ஆரம்பம் |
|---|---|
| 19,20,21,22, October 2012 | 25,26,27,28 October 2012 |
| SUN BRITISH COLLEGE | IISEEES NALLUR CAMPUS |
| No:-26, Station Road, Vavuniya. | No:-762, Point Petro road, Nallur,Jaffna. |
| T.P:-0770 58 46 58, 024 2226649 | T.P:-0770 58 46 58, 021 2224728 |


## அரசாங்கத்துக்கு எதிரா...

பொன்சேகா தலைமையிலான ஜனநாயக கட்சியையும் தமிழ்-முஸ்லிம் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசுக்கு எதிரான ஒரு பாரிய கூட்டணி ஏற்படும். இந்த நோக்கில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பின்னணியிலிருந்து நமது கட்சி ஆற்றிய பணி இன்று மீண்டும் தொடரும்.

இந்த நாட்டை ஆண்ட அனைத்து பெரும்பான்மை அரசாங்கங்களும் தமிழ் பேசும் மக்களைக் கூடக் குறைய பந்தாடியுள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசிய கட்சி ஆகிய இரண்டு கட்சி ஆட்சிகளிலும் தமிழ் மக்கள் மிகப்பெரும் இன வன்செயல்களுக்கு முகம் கொடுத்தார்கள்.

வடக்கு, தெற்கு, மலையகம் என்ற பேதம் இல்லாமல் தமிழ் முஸ்லிம் மக்கள் இந்த ஆட்சியின் கீழ் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருவது மக்களுடன் மக்களாக நிற்கும் எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

எனவே இந்த அரசாங்கம் வீழ்த்தப்பட்டே ஆகவேண்டும் இந்த அரசாங்கம் ஒரு பெரிய பிசாசு. இந்த பெரிய பிசாசை வீழ்த்த அவசியமானால் சின்ன பிசாசுகளுடனும் பேய்களுடனும் தேவதைகளுடனும் மனிதர்களுடனும் கூட்டுச் சேருவதற்கு நாம் தயாராக வேண்டும். ஆனால் இந்த அரசாங்கத்தை வீழ்த்த தனியொரு கட்சியாலோ, தனியொரு கூட்டணியாலோ முடியாது.

அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று சேருகின்ற சந்தர்ப்பத்திலேயே இது சாத்தியம். எனவே சரத் பொன்சேகாவின் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்வதில்லையென்ற முடிவை கடந்த வெள்ளிக்கிழமை கூடிய நமது அரசியல் குழு ஏகமனதாக எடுத்துள்ளது.

இதுபற்றி நாம், எமக்கு அழைப்பு விடுத்த சரத் பொன்சேகாவிற்கு தெரிவித்துள்ளோம் பெரும்பான்மை சிங்கள மக்களையும் தமிழ் பேசும் மக்களையும் ஒன்று சேர்க்கும் ஒரு கூட்டணி உருவாக வேண்டும். இந்த நோக்கில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பின்னணியிலிருந்து நமது கட்சியாற்றிய பணி இன்று மீண்டும் தொடருமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## மிதக்கும் ஆயுதக் களஞ்...

இந்தக் கப்பலை இலங்கை பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனம் ஒன்றே இயக்கிவருகிறது. இந்த நிறுவனம் இலங்கைக்குத் தெற்கிலும், செங்கடலிலும் மேலும் இரு மிதக்கும் ஆயுதக்களஞ்சியங்களை கொண்டுள்ளது. இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களில் உள்ள தன்னியக்க துப்பாக்கிகள், வெடிபொருட்கள், உடற்கவசங்கள், இலகு இயந்திரத் துப்பாக்கிகள், இரவுப்பார்வைக்கருவிகள்போன்றவற்றைபாதுகாப்புநிறுவனங்கள்வாடகைக்கு பெறமுடியும்என்றுஅந்தநிறுவனத்தின் இணையத்தளத்தில்கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு குடியரசு, சவூதி அரேபியா, யேமன் போன்ற நாடுகளில் பாதுகாப்பு நிறுவனங்கள் இந்த ஆயுதங்களைப் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளநிலையில், ஏனையநிறுவ்னங்களின் ஆயுதங்கள், வெடிபொருட்களை இந்தக் கப்பலில் நாளொன்றுக்கு 25 டொலர் வாடகைக் கட்டணம் செலுத்திப் பாதுகாக்கவும் முடியும். சிந்துபாத் கப்பலில் உள்ள ஆயுதங்களின் எண்ணிக்கையை வெளியிட நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி மறுத்துவிட்ட போதும், அந்த ஆயுதங்கள் இலங்கை அரசுக்குச் சொந்தமானவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். 5-7 நாட்களின் பின்னர் கப்பல் விடுவிக்கப்பட்டு விட்டது என்றார் அவர். ரக்ன ஆரக்சக சேனா பாதுகாப்பு நிறுவனம், இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவினால், உருவாக்கப்பட்டு நடத்தப்படுவதாகும்.

இது இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ்ச் செயற்படுகின்ற போதும், கோத்தபாய ராஜபக்ஷவே அதனை நிர்வகித்து வருகின்றார். அத்துடன்,துறையில்பாதுகாப்புநடவடிக்கைகளுக்கு இலங்கை இராணுவத்தினரையும், கடல்பாதுகாப்பில் இலங்கை கடற்படை கொமாண்டோக்களையும் ஈடுபடுத்தி பெருமளவுவருமானத்தை ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களையும் இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே நடத்திவருவதாக நம் பப்படுகிறது. (எ-11)

## தவிசாளர்...

பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றபோது வாகன போக்குவரத்தும் தடையின்றி இடம் பெற்றுக் கொண்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர் தமது கைகளில் பல எதிர்ப்பு பதாகைகளையும் தாங்கி நின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறிதரன், ஈ.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், செ.கஜேந்திரன் மற்றும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

இதேவேலை ஆர்ப்பாட்டம் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டபோது ஒன்று கூடியிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் ஆர்ப்பாட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் இராணுவமே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும் என்றவாறு கொச்சத்தமிழில் கூறி சிரித்து மகிழ்ந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (எ-6)

## அவுஸ்.செல்ல...

என்ற படகு மூலம் பயணிக்க முற்பட்ட இவர்கள் அனைவரும் சிங்களவர்கள் என விசாரணைகள் மூலம் தெரிய வந்ததாக கடற்படையின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இவர்களை காலி துறைமுகத்திற்கு அழைத்து வந்த கடற்படையினர் மேலதிக விசாரணைகளுக்காக இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-11)


**கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

அதி உயர் சம்பளம் (சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்)

கீழ்க் காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

I. எலக்ரீசியன் (Electrician)
II. பிளம்பர் (Plumber)
III. காப்பென்ரர் (Carpenter)
IV. மேசன் (Mason)

(C-1326)

இரண்டே வாரத்தில் பயணமாகலாம்
உடன் தொடர்பு கொள்ளவும்

Lanka Voice 24, Station Road, Vavuniya. 0750650084



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

மாணவர்கள் அனைவரினதும் கல்வி வளர்ச்சியினை முன்னிட்டு
வரும் விஜயதசமி அன்று
புதிய வகுப்புகள் ஆரம்பமாகவிருக்கின்றன

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** (International English Language Testing System)
(We guarantee minimum band 5.0 Upwards )
Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 22-10-2012 | Batch II - 24-10-2012 | Batch III - 27-10-2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074



**IELTS** BRITISH COUNCIL




IELTS FOR UK
STUDENT VISA APPLICANTS





- சர்வதேச தரம் வாய்ந்த கல்வி
- விரிவுரையாளர்கள் IELTS - Teachers Training முடித்து British Council சான்றிதழ்கள் பெற்றவர்கள்
- கடந்த பரீட்சைகளில் எமது கல்லூரியிற் படித்துப் பரீட்சை எழுதியவர்கள் Band- 8 வரை பெற்றுள்ளனர்
- Grammar & Vocabulary Development முக்கியமாக எமது பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாங்கள் விசேட கவனம் செலுத்தி மாணவர்கள் நல்ல அறிவு பெற்றுப்பரீட்சை எழுத ஆவன செய்வோம்
- Materials approved by British Council which are quite new including Cambridge 8
- 40 practice test
- Free IELTS pack & Mock Exams

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.

IELTS Registration Centre For British Council

| Course Schedule | Sat & Sun | வகுப்புக்கள் ஆரம்பம் |
|---|---|---|
| Duration | 10 Weeks | 20.10.2012 |
| Time | 8.30 to 11.30 | |

For registration and further details contact

**CITY COLLEGE OF ENGLISH**

No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 -222 0384
077 8803887
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org